# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 19 சனிக்கிழமை (02-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:188


# பொ.ஐ.மு. - ஐ.தே.க. பிரமுகர்கள்

# தேசிய அரசு அமைக்க முயற்சி!

## திரைமறைவில் பேச்சுகள் மும்முரம்

கொழும்பு,ஜூன்2

**தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளை வலுவான பலத்தோடு முறியடிப்பதை நோக்கமாகக் கொண்டு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்து தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் திரைமறைவில் மும்முரமாக நடைபெறுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.**

இருதரப்பையும் சேர்ந்த சிரேஷ்ட பிரமுகர்கள் சிலர் தமது தலைமைகளின் ஆசீர்வாதத்தோடு இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றி வருவதாகவும் -

இந்தப் பேச்சுக்கள் இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்தை அடைந்திருப்பதாகவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஆட்சியிலிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்து, தமது கட்சி ஆட்சிப் படமேறவேண்டும் என சில ஐ.தே. கட்சித் தலைவர்கள் விரும்புகின்றனர்.

அந்த முயற்சியை முறியடிப்பதாயின் இ.தொ.கா., ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளின் தயவில் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டும் என்பதை பொதுமக்கள் ஐக்கிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இரு தாக்குதல்கள்; படையினர் உட்பட 6 பேர் பலி

மூதூர்,ஜூன்2

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் படையினர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

கோமரசங்கடவெல என்ற இடத்தில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட பொலீஸ் - இராணுவக் கூட்டுப்படை அணி மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினரும், பொலீஸ்காரர் ஒருவரும், ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவரும் இரு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரியவருகின்றது.

இதேசமயம், சேருநுவரவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆர்.பி.ஜி. தாக்குதலில் படையினர் இருவர் காயமடைந்தனர்.

கோமரசங்கடவெலப் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்திய பகுதிக்கு விரைந்து சென்ற படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் அனுராதபுரம் வைத்தியசாலையிலும் மற்றொருவர் கந்தளாய் மருத்துமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி திருமலை தம்பலகாமத்தில் படையினர் சென்ற பஸ் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதும் 38 பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதை அண்டிய பிரதேசத்திலேயே நேற்றைய தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

(உ-க-ஒ-4)

# புலிகளைப் பேச்சுக்குக் கொண்டுவர சர்வதேச சமூகம் உதவ வேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்2



விடுதலைப் புலிகள் இயக்கத்தை பேச்சு மேசைக்குக் கொண்டுவருவதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கோரியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுமுன்தினம் மாலையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் - 34 நாடுகளின் பிரமுகர்கள் மத்தியில் - உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

உலக தரிசன சர்வதேச மன்றம் கொழும்பில் நடத்திய 'ஜனநாயகத்துக்கான ஊடகவியல்' - என்ற சர்வதேச கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களை ஜனாதிபதி இல்லத்தில் சந்தித்தபோது, அவர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும்கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றினாலும் பங்குபற்றாவிட்டாலும் தமிழ் மக்களின் சட்டரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படும்.

இந்த வழிமுறைகளைச் சாத்தியமாக்குவதற்காக அரசமைப்பை மாற்றியமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

சர்வதேச சமூகம் புலிகளை பேச்சுமேசைக்குக் கொண்டுவருமானால் அது மிகப் பெரிய விடயமாகும். அரசு தொடர்ந்தும் பேச்சில் அக்கறை கொண்டுள்ளது.

நோர்வே அரசு சமாதான நடைமுறையில் ஈடுபட்டதை புலிகள் விரும்பவில்லை. இதனால்தான் புலிகள் என்னைப் படுகொலை செய்ய முயன்றனர்.

இனப்பிரச்சினைக்கு இராணுவச் செயற்பாடுகள் மூலம் தீர்வு காண

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு இராணுவத் தளங்கள் மீதும் புலிகள் தாக்குதல் நடத்த முஸ்தீபு

கொழும்பு,ஜூன்2

வடக்கில் இராணுவத்தினரின் பிரதான நிலைகள் மீது பெருத்த எடுப்பில் தாக்குதல்களை நடத்துவதற்கான ஆயத்தங்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவருவதாக இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பூநகரியில் இருந்து அறுகுவெளி, தனங்களப்பு, அரியாலை ஆகிய பகுதிகளை நோக்கி பாரிய தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகவும் -

நாகர்கோயிலிலும் தாக்குதலுக்கான முன்னேற்பாடுகளைப் புலிகள் மேற்கொண்டிருப்பதாகவும் -

இராணுவப் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகவல்களையடுத்து, குறிப்பிட்ட இராணுவக் கட்டுப்பாட்டு நிலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை இராணுவத்தினர் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சில நாள்களுக்கு முன்னர் மட்டக்களப்புப் பகுதியில் பாரிய தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராகி வரு

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை வலியுறுத்தியும் பத்து லட்சம் கையெழுத்து வேட்டை

### தெற்கில் தீவிர பிரசாரம் ஆரம்பம்

கொழும்பு,ஜூன்2

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கோரி பௌத்த சிங்கள மக்களிடையே பத்து லட்சம் கையொப்பங்கள் திரட்டும் கையெழுத்து வேட்டை ஒன்றும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் சமாதான முன்னணி என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தக் கையெழுத்து வேட்டை தொடர்பான பிரசார நடவடிக்கைகள் தெற்கில் மும்முரமாக நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான பல சுவரொட்டிகள் தென்னிலங்கையில் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சுவரொட்டிகளில் "அஹிம்சையைப் போதித்த புத்த மண்ணில் யுத்தத் தீ அணையட்டும்", "பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் சாத்தியமாகும்", "யுத்தத் தீயை அணைக்க பங்களிப்புச் செய்யுங்கள்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இதேவேளை -

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளை புலிகள் அனுமதிக்கமாட்டார்களாம்

### அவர்களின் துண்டுப் பிரசுரத்தில் காரணங்கள் விவரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

"தனது சுயதேவைக்காக அரசு மேற்கொள்ளும் குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகளால் எமது மக்கள் எத்தனையோ விதமான உரிமைகளை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படப் போகின்றார்கள். இதன் காரணமாக, எந்த நெருக்கடியின் மத்தியிலும் அதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை".

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் நேற்று வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் துண்டுப்பிரசுரம் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமது உத்தியோகபூர்வ அறிவிப்புக் கிடைக்கும் வரை தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியேற வேண்டாம் என்று தென்மராட்சி மக்களுக்குக் கோரிக்கை விடுத்து, புலிகள வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இந்த விவகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மீண்டும் ஒருமுறை யாழ்.மக்களுக்கு" என்ற தலைப்பில் வெளியாகி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் - வாஜ்பாய் இன்று சந்திப்பு

கொழும்பு,ஜூன்2

ஆறுநாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயை இன்று சந்தித்துப் பேச்சு நடததவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாகவும், இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய வழிவகைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் ஐ.தே.க.வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை -

ரணில் விக்கிரமசிங்க தமது குழுவினருடன் இந்திய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜஸ்வந் சிங்கை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நோர்வேயின் தீர்வு முயற்சிகள் தொடர்பாக இருவரும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் முன்னாள் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் ஆகியோரையும் ரணில் ஏற்கனவே சந்தித்து பேசியுள்ளதாகவும் ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மாகாண, உள்ளூராட்சி சபைகளுக்கான அதிகாரங்களை மீளப்பெற முடியாது

## அரசு மீறினால் சட்ட நடவடிக்கை என்கிறார் ஐ.தே.க. எம்.பி.

கொழும்பு, ஜூன்2

அரசமைப்பின் 13 ஆவது பிரிவின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை எக்காரணம் கொண்டும் அரசு மீளப்பெறமுடியாது. அவ்வாறு மீளப்பெற முனைந்தால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்.

இவ்வாறு கூறியுள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் பேச்சாளருமான கருணாநேசன் கொடித்துவக்கு.

கொழும்பு மாநகர சபையின் குடிதண்ணீர் விநியோகத்தையும் அதன் திட்டமிடல் பகுதியையும் பொறுப்பேற்கப்போவதாக நகர அபிவிருத்தித் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளமை தொடர்பாக நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட அலுவலகத்தில் நடந்த இந்த மாநாட்டின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது பிரிவின் கீழ் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றுக்கு அதிகாரங்களீ வழங்கப்பட்டுள்ளன. அவற்றுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கலாமே தவிர அவற்றுக்கு வழங்கிய அதிகாரங்களைப் பறிக்கமுடியாது. அது சட்டவிரோதமான செயலாகும்.

அவ்வாறு அரசு செய்தால் அதறகு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் அதுபற்றி எமது சட்டவல்லுநர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் - என்றார். (க-3)

# முன்பள்ளி ஆசிரியர் நலன் பேணல்; அமைச்சருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்2

முன்பள்ளி ஆசிரியர்களின் நலன் பேணுதல் மற்றும் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத் தலைமையகத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய உதவிக் கொடுப்பனவு, சம்பளம் வழங்கல், முன்பள்ளிச் சிறார்களின் பாடவிதானங்களை மறுசீரமைத்தல் மற்றும் தேவைகள் பற்றிய விடயங்கள் குறித்து இந்தக்கலந்துரையாடல்களில் ஆராயப்படும்.

5ஆம் திகதி காலை 10 மணிக்கும், 6ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ்.தலைமையகம் அறிவித்துள்ளது. (க-ஒ)

# தென்னிலங்கை மீனவர்கள் விபசாரத்தில் நாட்டம்

## வறுமை நிலையே காரணம்

கொழும்பு,ஜூன்2

தென்னிலங்கைப் பகுதியில் வறுமை காரணமாக மீனவர்களில் பெரும்பாலானோர் விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் மேற்கு கடற்கரைப் பகுதிகளில் நூற்றுக் கணக்கான விபசாரிகள் காணப்படுவதாகவும் பாலியல் சுற்றுலாவை நோக்கமாகக் கொண்டு இலங்கை வரும் வெளிநாட்டவர்களுக்கு இவர்கள் விலை போவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வருமானம் வீழ்ச்சியடைந்ததால் மீனவர்கள் விபசாரத்தில் ஈடுபடுவது அதிகரித்து வருவதாக மீன்பிடி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-4)

# நாவற்குழி ஆலயத்தில் பூசை, வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

நாவற்குழி மேற்கில் உள்ள ஐயனார் கோயிலில் இடம்பெயர்வினால் தடைப்பட்டிருந்த பூசை வழிபாடுகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பிராயச்சித்த அபிஷேகத்துடன் மீள ஆரம்பமாகியுள்ளன.

இதேபோன்று கேரதீவு வீதியிலுள்ள வைரவர் ஆலயத்திலும் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஒ)

# குடிசன மதிப்பீட்டு ஆரம்பப் பணிகள் மும்முரம்

வலி.வடக்கு,ஜூன்2

யாழ்.மாவட்டத்தில் குடிசன மதிப்பீட்டுக்கான பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை முதல் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராம அலுவலர் மட்டத்திலுள்ள கண்டங்களில் கணக்கெடுப்புகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

30 பேர் கொண்ட வகுப்புகளாக பிரிக்கப்பட்டு இரண்டு நாள்களுக்குள் வகுப்புகள் நடத்துவதற்கான ஒழுங்குகளை யாழ்.செயலக புள்ளி விவரத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பில் இருந்து வந்துள்ள புள்ளி விவரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் இவர்களுக்கான வகுப்புகளை நடத்தவுள்ளனர்.(க-86)

# கப்பல், விமான சேவைகள்; பதிவுத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

கப்பல் மற்றும் விமான சேவைகளுக்கான இம்மாத பதிவுத்திகதிகளும் பயணத்திகதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கப்பலுக்கான பதிவுகள் யாவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையும் -

விமானத்துக்கான பதிவுகள் யாவும் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையும் மேற்கொள்ளப்படும் என்று 'றான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

| கப்பல் பதிவுகள் | | பயணத் திகதிகள் |
|---|---|---|
| ஜூன் 8ஆம் திகதி | - | 19, 21ஆம் திகதிகள் |
| 15ஆம் திகதி | - | 26, 28ஆம் திகதிகள் |
| 22ஆம் திகதி | - | ஜூலை 3, 5ஆம் திகதிகள் |
| 29ஆம் திகதி | - | ஜூலை 10, 12ஆம் திகதிகள் |

| விமானப்பதிவுகள் | | பயணத்திகதிகள் |
|---|---|---|
| ஜூன் 5ஆம் திகதி | - | 7, 8, 9ஆம் திகதிகள் |
| 7ஆம் திகதி | - | 11, 12, 13ஆம் திகதிகள் |
| 12ஆம் திகதி | - | 14, 15, 16ஆம் திகதிகள் |
| 14ஆம் திகதி | - | 18, 19, 20ஆம் திகதிகள் |
| 19ஆம் திகதி | - | 21, 22, 23ஆம் திகதிகள் |
| 21ஆம் திகதி | - | 25, 26, 27ஆம் திகதிகள் |
| 26ஆம் திகதி | - | 28, 29, 30ஆம் திகதிகள் |
| 28ஆம் திகதி | - | ஜூலை 2, 3, 4ஆம் திகதிகள் |

(க-10)

# வளி மண்டல அவதான நிலையம் திருநெல்வேலியில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

திருநெல்வேலி விவசாய அராய்சசி நிலையத்தின் காணியில் புதிதாக அமைக்கப்பட்ட வளி மண்டல ஆராய்ச்சித் திணைக்களத்தின் வளிமண்டல அவதானிப்பு நிலையம் நேற்றுக் காலை 10.15 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது.

வளி மண்டல ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர். என்.ஏ. அமரதாஸ சிங்கள மக்களின் சம்பிரதாய முறைப்படி வெற்றிலை வழங்கி அமைச்சரை வரவேற்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களப் பணிப்பாளர், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் 51 ஆவது படையணியின் பிரதிக் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் விஜயவிக்கிரம மற்றும் யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் மகாலிங்கம் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி விழவை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து அமைச்சர் வளிமண்டல அவதானிப்பு கருவிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட வளிமண்டல உத்தியோகத்தர் எஸ்.கே. யோகேஸ்வரன் மற்றும் தொழில் நுட்பவியல் உத்தியோகத்தர் த.பிரதீபன் அகியோரும் கலந்து கொண்டனர்.

யுத்த நடவடிக்கைகளை அடுத்து கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வளிமண்டல அவதானிப்பு நிலையம் இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த நடவடிக்கை காரணமாக 1993 ஆம் ஆண்டு முதல் முற்றிலுமாகத் தொழிற்படாதிருந்த யாழ். வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் லெஸ்லி குணவர்தனவுடன் பேச்சு நடத்தியதை அடுத்து மீளவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நிலையத்தை மீள நிறுவுவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2 இலட்ச ரூபா நிதியை வழங்கியுள்ளார். இதேவேளை இந் நிலையத்தில் 10 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மீளவும் பொருத்தப்பட்டுள்ளன.

மீள நிர்மாணிக்கப்பட்ட வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தின மூலம் யாழ்.குடாநாட்டின் விவசாய நடவடிக்கை மற்றும் கடற்றொழில் உட்பட பல நடவடிக்கைகளுக்குமான மழை வீழ்ச்சி, வெப்பநிலை, காற்றின் வேகம், ஈரப்பதன் ஆகிய அளவிடப்பட முடியும் எனவும் விவசாயிகள், மீனவர்கள், பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்வோர், பாடசாலை மாணவர்கள் என சமூகத்தின் அனைவரும் தேவையான வளிமண்டலவியல் சம்பந்தமான தகவல்களை இந் நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# உதைபந்தாட்ட வீரர்களுக்கு அழைப்பு

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் அங்கம் வகிக்கும் - 1983 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த - உதைபந்தாட்ட வீரர்களை இன்று 02-06-2001 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தருமாறு யாழ். உதைபந்தாட்ட லீக் அழைத்துள்ளது.

19 வயதுக்குட்பட்டவர்கள் கலந்துகொள்ளும் - மாவட்ட லீக்குகளுக்கு இடையிலான - வெற்றிக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் யாழ். லீக் அணியின் வீரர்களைத் தெரிவு செய்வதற்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க-51)

# சர்வதேச மனிதாபிமானச் சட்டம் குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு புலிப் போராளிகளுக்கு கருத்தரங்கு

திருகோணமலை,ஜூன்2

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கடந்த புதன்கிழமை சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பற்றிய கருத்தரங்கு நிகழ்வு ஒன்றை நடததியுள்ளது.

திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் பிரதேசத்தில் முதற்றடவையாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் அதிகளவான புலிகள் கலந்துகொண்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருமலை அலுவலகப் பரப்புரை அதிகாரி என்யுஎஸ்ராஜன் தெரிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தெற்காசியப் பிராந்திய நடவடிக்கைகளைக் கவனித்துவரும் ஓய்வுபெற்ற பிரிட்டிஷ் இராணுவ மேஜர் சென்ஜேம்ஸ் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மூதூர் உப அலுவலகப் பொறுப்பாளர் ஆகியோர் விளக்கவுரைகளை நடத்தினர்.

இதேவேளை -

கடற்படை அதிகாரிகளுக்கும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பற்றிய மூன்று நாள் பட்டறை ஒன்றை அண்மையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

# நோர்வே மீது சிங்கள மக்கள் சந்தேகமாம்

கொழும்பு,ஜூன்2

நோர்வேயின் சமாதான முயற்சிகளில் பெரும்பாலன சிங்கள மக்கள் சந்தேகம் கொண்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நோர்வே விடுதலைப் புலிகளுக்கு மிகவும் ஆதரவான ஒரு நாடு என்று சிங்கள மக்களில் பலர் சந்தேகிக்கின்றனர்.

நோர்வேயின் செயற்பாடு புலிகளுக்கு சர்வதேச ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதாகவே அமைந்துள்ளது என்றும் அமைச்சர் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (க-4)

## வளிமண்டல அவதானிப்பு நிலையம்

# மாணவர்கள் அனுமதி பெற்று பார்வையிட முடியும்

யாழ்ப்பாணம்,ஜூன்2

வளிமண்டல ஆராய்ச்சி, அவதானிப்பு நிலையத்தின் உபகரணங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பாகக் கற்க விரும்பும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு அனுமதி பெற்ற பின்னர் பார்வையிட முடியும்.

- இவ்வாறு வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலைய சிரேஷ்ட உத்தியோகத்தர் எஸ்.கே.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள இந்த அவதானிப்பு நிலையத்தில் வெப்பநிலை மற்றும் ஈரப்பதன், வளிமண்டல அமுக்கம், காற்று வீசும் திசை, வேகம், புற்றரை மீதான இழிவு வெப்பநிலை, வெவ்வேறு ஆழங்களில் மண்ணின வெப்பநிலை, சூரியப்பிரகாச நீடிப்பு, நீர் ஆவியாதல் வீதம், சூழலின உயர் வெப்பநிலை - இழிவு வெப்பநிலை, மழைவீழ்ச்சி போன்றவை மூன்று மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை சேகரிக்கப்படும்.

இவற்றைச் சேகரிப்பதற்கான அனைத்து கருவிகளும் புதிதாக பொருத்தப்பட்டுள்ளன.

இவை தொடர்பான விவரங்கள் மற்றும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கு - பார்வையிடுவதற்கு - விரும்பும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள், கருத்திட்டங்களைத் தீட்டுவோர், கட்டட விற்பன்னர்கள், உயர் கல்வி கற்போர் போன்றோர் வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமக்குரிய தகவல்களைச் சேகரித்துக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (க-6)

# விளையாட்டு நிகழ்வு

பலாலி பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், சங்க அணிகளுக்கிடையே நடத்திவரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் இன்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ யாழ்.வர்த்தக வங்கி அணி எதிர் பலாலி ஆசிரியர் கலாசாலை அணி

★ யாழ்.செயலக விளையாட்டு அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி

# ஒத்திவைப்பு

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த - இடம்பெயர்ந்த கொழும்புத்துறை மக்களுக்கான - கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். (க-17)


# மரண அறிவித்தல்

## வயிரப்பிள்ளை முருகையா

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரப்பிள்ளை முருகையா அவர்கள் நேற்று (01.06.2001) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் கணேசானந்தன் (பகுதி நேர ஆங்கில ஆசிரியர், யாழ்.கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை), சிவானந்தன்(களஞ்சியப் பொறுப்பாளர், யாழ்.பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி, அன்னலட்சுமி, சிவசுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நல்லநாதனின் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2001) சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*புன்னாலைக் கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(C/16964)

## உதயன்

### சிறந்த மார்க்கம்

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச்சட்டம் ஆகிய இரண்டின் கீழும் தொடரப்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட வழக்குகள் உரிய முறையில் தொடர்ந்து நடத்தப்படாமல் மூன்று வருடங்களுக்கு மேலாக இழுத்தடிக்கப்படுகின்றன!

வழக்குகளின் விசாரணைகளை உரிய முறையில் நடத்தித் தீர்ப்பு வழங்கி முடிக்கக் கூடியதாக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடான உரிய ஆவணங்கள் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படாததாலேயே இவ்வாறு காலதாமதமாவதாக மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் சுட்டிக்காட்டி உள்ளார். உண்மை நிலையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பொலீஸ் பகுதியாரின் அல்லது சட்டமா அதிபர் திணைக்களத்தினரின் - அவற்றின் அசமந்தத்தினால்- சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் மூன்று வருட காலத்துக்கு மேலாகத் தடுப்புக் காவலில் இருந்து இன்னற்படுகிறார்கள்.

விசாரணை தொடர்ந்து நடைபெறாததால் மன்னார் நீதிமன்ற பிரதேசத்தில் மட்டும் 200 பேர் இவ்வாறு தமது தவறினால் அன்றி, அரசாங்கத் தரப்பின் தவறினால் அனியாயமாகத் தடுப்புக் காவலில் கிடந்து பல துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்றால் -

நாட்டின் ஏனைய நீதிமன்றப் பிரிவுகளில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் அரசாங்க அதிகாரிகளின் அசமந்தத்தினால் அல்லற்படுகிறார்கள் என்பது பயங்கரமான உண்மையாகும்.

இவர்களில் பெரும்பாலானோர் ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கூடத் தடுப்புக் காவலில் உழன்று தமது இளமையை வீணாக்க நேரிட்டுள்ளது. அவர்களுக்கு நீதி வழங்குவதற்கு அரசாங்கம் - அதன் அதிகாரிகள் - தடையாக உள்ளனர் என்பதே நடைமுறை நிலை.

சிங்கள இளைஞர்கள் இவ்வாறு வருடக் கணக்காக - கால எல்லை இன்றி - சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் இருந்து இன்னலுற்றால் தெற்கில் ஒரு பூகம்பமே - புரட்சியே - வெடித்திருக்கும்.

தமிழ் இளைஞர்கள் என்பதால், தட்டிக்கேட்க எவரும் இல்லை என்பதால், அரசின் அசமந்தம் குறித்துப் பேசினால் அவ்வாறு பேசுபவர்கள் புலி ஆதரவாளர்கள் என்று முத்திரை குத்தப்படுவார்கள் என்பதால் நியாயம் கேட்போர் எவரும் இல்லை என்றாகி விட்டது.

பயஙகரவாதத் தடைச் சட்டமும், அவசரகாலச் சட்டமும் உரிய ஆதாரம் இன்றி எவரையும் சந்தேகநபர் என்ற "முத்திரை குத்தி" கைது செய்வதற்குப் படை மற்றும் பொலீஸ் அலுவலர்களுக்கு தாராளமாக அதிகாரங்களை வழங்கியுள்ளது.

"சந்தேகத்தின்பேரில்" கைது செய்யப்படுவோர் மீது வழக்குத் தொடர்வதற்கோ, வழக்கை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கோ காலவரை எதுவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இல்லை. சந்தேகநபர்கள் என்று கைது செய்யப்பட்டவர்களை நீதிபதி முன் - நீதிமன்றத்தில் - ஆஜர் செய்வதற்கு மட்டுமே அந்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளன. மேற்சொன்ன பயங்கரமான சட்டவிதிகளைத் தமது கையில் எடுத்துக்கொண்டே, வழக்குத் தாக்கல் செய்யும் பொறுப்புள்ள பொலீஸார் ஏனோ தானோ என்று செயற்படுகிறார்கள். அவ்வாறு அசட்டையாகச் செயலாற்றுவதால் தமக்கு உத்தியோக ரீதியாகத் தண்டனை எதுவும் கிடைக்காது என்ற துணிவிலும் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள்!

காவலில் - சிறையில் - வைக்கப்பட்டு அல்லற்படும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமெனில், இனிமேல் நீதிபதிகள் தான் விழித்துக்கொள்ள வேண்டும் - உஷாராக வேண்டும்.

மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் எச்சரித்திருப்பது போல, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுத், தொடர்ந்து உரிய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படாத வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிடுவதே சிறந்த மார்க்கம். அரசாங்க அதிகாரிகளை வழிக்குக் கொண்டுவர உகந்த நடவடிக்கையும் அதுவே.

# பேச்சை முன்னெடுப்பது பற்றி ஆராய ஆலோசனைக் குழு

## அமைக்கப்பட வேண்டும் என்கிறார் ராஜதந்திரி

கொழும்பு,ஜூன்2

விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்கென ஐ.தே.கட்சி மற்றும் ஏனைய எதிர்கட்சிகளின் உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்றை இலங்கை அரசு நியமிக்க வேண்டும்.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் தெரசிட்டா ஸ்கேபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் மூலம் பிரபாகரனுக்கு எத்தகைய நன்மை கிடைக்கும் என்பதனை நினைத்துப்பார்க்க முடியாது. தமது மனங்களை மாற்றிக்கொண்டுள்ள யசீர் அரபாத், ஜெரி அடம்ஸ் ஆகியோர் போன்று பிரபாகரனும் வெளியில் வந்து பொது அரசியல் வாழ்வில் கலந்துகொள்வாரா என்பது சந்தேகமே - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தொழில் நுட்ப உதவியாளராக 6 பேர் இங்கிருந்து தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தொழில் நுட்ப உதவியாளர்களை ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முழுநேரப் பயிற்சி எதிர்வரும் 11 ஆம் திகதி கலகமுவ நீர்ப்பாசனப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

உரியவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட ஆறுபேரினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

★எஸ்.நிரஞ்சன் (மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்), எம்.பிரதீஷ் (கல்லூரி வீதி, பருத்தித்துறை), ப.அருள்ராஜா (மவுந்திப்புலம், காரைநகர்), எஸ். ராஜ்குமார் (கோட்டைக்காடு, மல்லாகம்), வி.ஜே.தெய்வேந்திரா (கச்சேரி நல்லூர் வீதி,யாழ்.), செல்வி ச.மாதுமையாள் (கலட்டி ஒழுங்கை, கோண்டாவில்)

(ஐ-10)

# நாடாளுமன்ற உணவுச் செலவை கட்டுப்படுத்துமாறு பிரேரணை

கொழும்பு,ஜூன்2

நாடாளுமன்றத்தில் உணவு மற்றும் சிற்றுண்டி முதலானவற்றை வழங்க பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது. இச் செலவைக் குறைக்க உணவு மற்றும் சிற்றுண்டிக்காக வழங்கப்படும் மானியத்தை ரத்துச் செய்து உணவுக்குச் செலவாகும் தொகையுடன் பத்து வீதத்தைச் சேர்த்து அறவிட வேண்டும்.

இவ்வாறு கோரும் பிரேரணை ஒன்றை 35 எம்.பிக்கள் கையொப்பமிட்ட நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் கடமை புரிவோருக்கு மாத்திரம் மானிய விலையில் உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளை வழங்கி ஏனையோருக்கு மானியத்தை ரத்துச் செய்யும்படி அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ. த.க., ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் எம்.பிக்களே இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளனர். (ஐ-7)

# ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்ப்பாணக் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையில் 'புத்துலகிற்கான பாதை' என்ற தலைப்பிலான மாணவர் ஆக்கத்திறன் போட்டிகள் எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளன.

ஆரம்பப் பிரிவிற்குரிய போட்டி சன்மார்க்க மகா வித்தியாலயத்திலும், கனிஷ்ட பிரிவிற்குரிய போட்டி வண்ணை நாவலர் வித்தியாலயத்திலும், சிரேஷ்ட பிரிவிற்குரிய போட்டி வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்களும் மாணவர்களும் 22ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் 5 மணிவரையும், மறுநாள் 23ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையும் ஆக்கத்திறன் போட்டிகளில் உருவாக்கப்பட்ட பொருள்களைப் பார்வையிடலாம் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-9-10)

## நாரஹேன்பிட்டியில் திடீர் தேடுதல் 6 இளைஞர்கள் கைது

கொழும்பு,ஜூன்2

நாரஹேன்பிட்டியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற திடீர் தேடுதல் நடவடிக்கையில் ஆறு இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் தங்களை உறுதிப்படுத்துவதற்கான பொலீஸ் பதிவுகள், அடையாள அட்டைகள் இல்லாத காரணத்தினாலேயே கைது செய்யப்பட்டு நாரஹேன்பிட்டி பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தயானந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்தத் திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது வீடுகளில் இருந்தோர், வீதியால் போவோர் வருவோர் அனைவரும் சோதனை செய்யப்பட்டனர்.

ஆறு பேர் மட்டுமே கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எனவும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தேடுதலில் 200இற்கும் மேற்பட்ட பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர். (ஐ-7)

## இராஜ வீதி ஊடாக அச்சுவேலிக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம்,ஜூன்2

இராஜ வீதி ஊடான யாழ்ப்பாணம் - அச்சுவேலி பஸ் சேவை நேற்று முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

நேற்றுக்காலை 7.20 மணிக்கு முதலாவது சேவை அச்சுவேலியிலிருந்து ஆரம்பமானது. தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு இரண்டாவது சேவையும் பிற்பகல் 3.50 மணிக்கு மூன்றாவது சேவையும் அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெற்றது. காலை 9.45 மணி, பிற்பகல் 2.35 மணி, மாலை 5 மணி என மூன்று சேவைகள் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து அச்சுவேலிக்கு இடம்பெற்றன. 5 மணிக்குப் புறப்படும் பஸ் மாலை 6 மணிக்கு அச்சுவேலியைச் சென்றடையும்.

இந்த ஒழுங்கின்படியே தினமும் சேவைகள் இடம்பெற உள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

## நாளை

வைகாசி 20
ஞாயிற்றுக்கிழமை
திதி: துவாதசி
முற்பகல் 9.18 வரை
நட்சத்திரம்: சுவாதி
முன்னிரவு 10.13 வரை.
சுபநேரம் : 8.52 - 10.22
ராகுகாலம் : 4.22 - 5.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சான்றோர்க்கிடையில் வளர்பவன், தானே சான்றோன் ஆகிவிடுவான்.

# நாட்டு நடப்பு

இந்துமதி இங்கிலாந்து சென்று
ஈராண்டு தங்கிவிட்டு வந்து
இந்தத் தமிழ் மறந்துபோச் சென்று
இங்கிலீஸ்தான் பேசுவேன் என்று
மந்திபோலத் தலைமயிரை வெட்டி
மாப்பிளையை சூட் போடவைத்து
கந்தரம்மான் கலியாண வீட்டில்
கரண்டி முள்ளுதான் பிடித்தாள் இன்று

- விகடகவி -

# உலகம் சுற்றும் வீடியோ கசெற்!

கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி முருகன் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தின் போது இது நடந்தது (அப்படியல்ல, வேறு இடங்களிலும் அப்படி நடந்திருக்கிறது என்பீர்கள்...). முகூர்த்த நேரம் முடிவடையும் தருணத்திலே தான் மணமகன் மண்டபத்துக்கு அழைத்து வரப்பெறுகிறான். காரணம் வீடியோ படப்பிடிப்பாளர்கள் அப்படித் தாமதிக்க வைத்து விட்டார்களாம். அவர்கள் மணமகனின் (வாடகை) வீடு, சுவர், கூரை தொடக்கம் அனைத்தையும் படமெடுத்த பின்னர்தான் மாப்பிள்ளை அழைப்புக்குப் பச்சைக் கொடி காட்டினார்களாம்.....

ஐயர் வரும்வரை அமாவாசை பொறுத்திருக்குமா என்பது பழமொழி. அங்கே வீடியோகாரர் மணமகனுடன் வரும்வரை ஐயர் பொறுத்திருக்கிறார்.... அதுவும் பொறுமையிழந்தவராக.... பின்னர் வேறு வழியின்றி 'சட்டுப்புட்'டென தாலிகட்டும் சடங்கை முதலில் செய்துவிட்டு, ஏனைய அதற்கு முன்னருள்ள கூறை மாற்றும் சடங்கு போன்றவைகளையெல்லாம் அதனையடுத்தும் செய்து சமாளிக்க வேண்டியதாயிற்று.

வீடியோ படப்பிடிப்புக்களால் சில நன்மைகளிருந்தாலும் பல அவமானங்களும் அவமதிப்புகளும் கூட இருக்கின்றன.

விழா மண்டபத்தில் மங்களகரமாகப் போடப்பெற்ற மாவிலை, தோரணங்கள், மாலைகளையெல்லாம் தாம் நினைத்தவாறு இவர்கள் புறம் தள்ளிவிடுகிறார்கள். கதாநாயகர்களுக்கு அடுத்த கௌரவ நடிகர்களான மணமக்களின் பெற்றோர்களை- பெரியவர்களை - தள்ளி நிற்கும்படி கட்டளையிடுகிறார்கள் ஐயரை 'கொஞ்சம் பொறும்' (அதிகாரம் இப்போது அவர்கள் கையில் தான்) என்கிறார்கள். படத்தில் அக்காட்சி சரியாக எடுபட்டிருக்காது என்பதற்காகத் தாலியைத் திரும்பவும் கட்ட வேண்டும் எனச் சொல்லும் துணிச்சல் இன்னமும் வரவில்லை என்றாலும் 'அப்படிப் பாவனை' செய்யும் படி சொல்லுகிறார்கள்.

என்று வீடியோப் படப்பிடிப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதோ அன்றிலிருந்து விருந்தினர்கள் சரியாகக் கவனிக்கப்படுவதில்லை என்ற குறைபாடும் வந்துவிட்டது. 'நல்வரவை' நாடியவர்களின் கவனமெல்லாம் அங்கேயே இருப்பதால் வந்தவர்களை வரவேற்பதிலோ அவர்களுக்கு விருந்தளிப்பதிலோ அக்கறை குறைந்து வருகிறது. ஆனால் சாப்பாட்டுப் பந்தியும் படத்தில் விழவேண்டும் என்ற அக்கறைக்கு மட்டும் குறைச்சலில்லை.

முன்னர் ஒரு சமயம் ஒரு பெண்மணி அமைச்சர் ஒருவருக்கு மாலை போட்டதை வைத்துக்கொண்டு தமிழ்ப் பண்பாடே போய்விட்டதாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கொழும்பிலுள்ள தமிழ்த் திருமணங்களில் இப்பண்பாடு முத்தம் வரை வந்துவிட்டது. மணமேடையில் மணமகனின் தந்தையார் மகளுக்கு மட்டுமல்ல, மருமகளுக்கும் முத்தம் கொடுக்கிறார். மணமகளின் தாயார் மகளுக்கு மட்டுமல்ல மருமகனுக்கும் முத்தம் கொடுக்கிறார். இதெல்லாம் வீடியோக்காரர்கள் தொடக்கிவைத்த பண்பாடாகத்தான் இருக்கவேண்டும். 'ரீவி, டெக்' வைத்து தமிழ்ப்பட 'பீஸ்' போட்டுப் பார்த்துப் பழகியவர்களுக்கு கவர்ச்சியூட்ட வேண்டாமா என்ன?

நினைக்க........
..........சிந்திக்க

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள். அப்படியல்ல, அவை நல்லூர் திருவிழாவில் நிச்சயிக்கப்படுகின்றன என்று நண்பர் சோக்கல்லோ சண்முகநாதன் நல்லூர்த் திருவிழா வானொலி நேர்முக அஞ்சலில் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. ஆவணியில் அங்கு பெண் பார்க்கும் படலமும் அதனைத் தொடர்ந்த மாதங்களில் திருமணங்களும் நடைபெறுமாம், உண்மைதானே? அதைவிட சில காதல்கள் அரும்பு கட்டுவது கூட...

பிந்திக் கிடைத்த தகவல்களின் படி அந்தப் பணியை வீடியோ கசற்றுகளும் செய்து வருகின்றனவாம். கனடா, லண்டன், சுவிஸ் என்றெல்லாம் உலாவரும் இந்தக் கசற் மூலம் 'திருநிறை செல்வங்களை' இனங்கண்டு தெரிவு செய்து மேற்கொண்டு ஆவன செய்யப்படுகிறதாம். அதற்கேற்றாற் போல 'இளசு'களைப் பல கோணங்களில் 'பளிச்' செனப் படமெடுக்கும் வீடியோ வித்தகர்களின் பணி ஒரு வகையில் வியந்து பாராட்டத் தக்கதுதானே!

பம்பலப்பிட்டி மண்டபம் ஒன்றில் திருமணத்தையடுத்து விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனக்குப் பக்கத்திலிருந்த ஸ்ரீதர் பூபாலசிங்கம், 'வடை நன்றாக இருக்கிறது' என்று சொல்ல, அதனைப் புரிந்து கொண்ட பரிமாறிக் கொண்டிருந்தவரும், அவருக்கும் அந்த வரிசையிலிருந்தவர்களுக்கும் மேலும் ஒவ்வொரு வடை வைத்துக் கொண்டு வந்தார். "சண்ணும் ஒன்று எடும்..." என்றார் ஸ்ரீதர்.

"எடுப்பதில் ஒன்றுமில்லை. ஆனால் அதையுமல்லவா படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் யோசிக்கிறேன்" என்றேன் நான்! ஆம் அதுவும் உலகம் சுற்றப்போகும் வீடியோ கசற் அல்லவா?

~ சண் அங்கிள் ~


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

ஆராய்ந்து பார்க்கும் வேண்டாத வீண்வம்பு
வெடிக்காத வெடிபொருள் வெடித்திடும்
அதன்போது
உங்கள் உடல் சிதறி உயிரும் பிரியலாம்
அப்போது!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 36 வயது, பூசம் 2 ஆம் பாதம், கொழும்பில் தனியார் வர்த்தக நிறுவனத்தில் பொறுப்புள்ள பதவி வகிக்கும் மணமகனுக்கு படித்த, பண்பும் அழகுமுள்ள மணமகள் தேவை. சாதகம், புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். க.பொன்னையா, மூளாய் கிழக்கு, சுழிபுரம். (88411)

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு:- விள.இல. 1296, மே/பா. உதயன். (88465)

## திருமண நிலையம்

எண்சோதிட முறைப்படி உங்கள் ஆங்கில பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமான மணமகன், மணமகளைத் தெரிவு செய்து திருமணம் முடித்து வைப்போம். திருமணமாகாத ஆண், பெண் இருபாலாரும் சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு:- எண்கலை ஆசான் சி.சி.கே. ஸ்ரீராஜராஜேஸ்வரன, வித்தனை வீதி, வல்வெட்டித்துறை. (88521)

## விற்பனைக்கு

நல்லின **ALSATION** நாய்க்குட்டிகள் பூச்சி நீக்கியும் தொற்று நீக்கியும் விற்பனைக்குஉண்டு. தொடர்பு:- K.முத்துக்குமார், 75/10, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. (கீன் கல்வி நிலைய முன் ஒழுங்கை) (88457)

நல்ல நிலையிலுள்ள கிறைன்டிங் மில்லுக்குரிய மின் மோட்டார் (10,14 HP) பிளேட் வெட்டும் மிசின், ஏசியா சைக்கிள்கள், இரும்புப் பெட்டகம், **(IRON SAFE)** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கதிர்காமராசா (பெயின்ரர்), முத்தட்டு லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (**ARMY CAMP** க்கு முன் லேன்). (88565)

## நாய்க்குட்டிகள் விற்பனை

பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு: தொடர்பு:- 772, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரேசன் சந்திக்கு அண்மையில்) (88518)

## இறைச்சிக்கோழி விற்பனை

**Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதி கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர். (88509)

புறொயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் பச்சை, நீலம், மஞ்சள், வெள்ளை விற்பனைக்குண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88559)

## ஒரு காதலின் கதை

சிங்களம் மட்டும் சட்டம். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கதையை அறியவேண்டுமா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை ஒரு கொழும்பு வார மலரில் எழுதும் தொடர்கதையின இந்த வாரக் கதையை வாசித்துப் பாருங்கள். (88450)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்கத் திணைக்களத்தில் உத்தியோகத்தராகக கடமையாற்றும் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. படம், ஜாதக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விள.இல.1297, மே/பா. உதயன். (88516)

## வீடு விற்பனைக்கு

305/1, ஸ்ரான்லி வீதியில் (விக்னா ரியூட்டறி முன்பாக) 1 1/2 பரப்புக் காணியில் அமைந்த 5 அறைகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. கடைகள் கட்டுவதற்கு மிகவும் உகந்தஇடம். தொடர்பு கொள்ள:- தம்பிஐயா, 62/2,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (88252)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: செல்வம், மங்கள மாளிகை, மாயக்கை, பருத்தித்துறை. (கால் நடை தீவன விற்பனை நிலையம் அருகில்) (88535)

புறொயிலர் இறைச்சிக்கோழி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சங்கீத், 40, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு (கல்வியங்காடு சந்திக்கருகில்).(88556)

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழிஇறைச்சி 1 கிலோ 240/= விற்பனைக்குண்டு. **CHICKEN SAUSAGES, MEAT BALLS, FLORA, MEDOWLEAR, ASTRA, ANCHOR BUTTER** என்பன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். **T.P.2868.** (88531)

## காணி விற்பனைக்கு

நல்லூரில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. க.சோமசுந்தரம், 50/06, செட்டித்தெரு, நல்லூர். (88560)

## தவறிவிட்டது

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை குலசிங்கம் என்பவருடைய தேசிய.அ.அட்டை (இல.592570440) 30.05.2001 இல் யாழ்.நகரப்பகுதிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். துளசி அழகுமாடம். இல.357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். **T.P.2918**. என்ற முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். (88519)

திருமதி பாக்கியராஜா வசந்தகுமாரி என்பவரின் தேசிய அ.அ. (இல.528372872**X**) விசேட அ.அ. (இல. 0902004636) என்பன 21.05.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 860, காங்கேசன்துறை வீதி, தட்டாதெரு (அரசடிப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (88555)

சில்லாலை வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த முத்தையா கிருபாகரன் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 712320729**V**), வி.அ.அட்டை (இல. 0905021080), அலுவலக அடையாள அட்டை என்பன சங்கானைக்கும் இளவாலைக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (88562)

## சிவப்பு குஞ்சுகள்

31/2 மாதத்தில் முட்டையிட ஆரம்பிக்கும் **SAMEERA** இன சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. புறொயிலர் குஞ்சுகள் இன்று மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி. அல்லது "கிளின் சொட்" பின்புறம் யாழ்.பஸ் நிலையம், அல்வாயில் சுபகணநாதன், மாலிசந்தி (86561)

## மணமகன் தேவை

பல்கலைக்கழகக் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கும் கிரக பாவம் குறைந்த 27 வயதுடைய இந்து மணமகளுக்கு, பெற்றோருடன் வெளிநாட்டில் வசிக்கும் அல்லது வெளிநாடு செல்லும் மணமகன் தேவை. மணமகனை வெளிநாட்டுக்கு அழைக்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்ப விள. இல.1298, மே/பா உதயன். (88537)

## 'கலை அமுது' நூல் வெளியீடு

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியை திருமதி சுபாதினி தயாபரன் எழுதிய 'கலை அமுது' நூல் வெளியீடும் கலைவிழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்துமகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் வ.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் சபா.ஜெயராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி. சரஸ்வதி ஜெயராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-10)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தும்பளை, இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளிஅம்மன், வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை பகல் 11.29 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை முழுநாளும் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.

சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கும்பாபிஷேக நிகழ்வில் அருளாசி உரைகளை பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள், சிவஸ்ரீ கந்த.சோமசுந்தரக் குருக்கள் ஆகியோரும் வாழ்த்துரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ-10)

## வடமராட்சி கிழக்குக்கு நிதி ஒதுக்கீடு

வடமராட்சி,ஜூன்2

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக்கு இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-182)

## வடமராட்சி கிழக்கில் பொதுக் கிணறுகள்

வடமராட்சி கிழக்கு,ஜூன்2

வடமராட்சி கிழக்கில் மக்களின் குடிதண்ணீர் தேவைக்காக மூன்று பொதுக் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன.

குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய இடங்களிலேயே இக்கிணறுகள் அமைக்கப்பட உள்ளன.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் பருத்தித்துறை பிரதேச சபை நிதியிலிருந்து இதற்கான நிதியினை ஒதுக்கியுள்ளார். (ஐ-182)

## சந்நிதியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூன் 2

வைகாசி விசாகப் பெருவிழாவை முன்னிட்டு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை உற்சவத்திற்குப் பின்பு 'செயல் மாண்டு அடங்க' எனும் தலைப்பில் சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றவுள்ளார்.

ஆலயத்தின் பிரதமகுரு ஸ்ரீ தெய்வேந்திரா ஐயர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ-10)

## மலகூடம் அமைக்க மானிய உதவி பெறுவோர்

தென்மராட்சி,ஜூன் 2

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மலகூடம் அமைப்பதற்கான மானியம் கோரி விண்ணப்பித்த மேலும் 16 பேருக்கான காசோலைகள் மந்திகை ஆஸ்பத்திரியில் இயங்கும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குக் கிடைத்துள்ளன.

பின்வருவோர் தமது காசோலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிமனைப் பொறுப்பதிகாரி தி.கிளின்டன் அறிவித்துள்ளார்.

★ வே.வீரகத்தி - மாசேரி, வரணி.
★ கு.குணரத்தினம் - கச்சாய்வீதி, சாவகச்சேரி.
★ வி.குமாரசாமி - மீசாலை கிழக்கு.
★ நா.தவமணி - மீசாலை கிழக்கு.
★ இ.திருச்செல்வம் - மீசாலை கிழக்கு.
★ ந.கணேசநாதன் - பெரியபளை, பளை.
★ இ.பாறுபதிப்பிள்ளை - தம்பகாமம், பளை.
★ வே.யோகநாதன் - கண்டி வீதி, பளை.
★ த.தவமணி - வண்ணான்கேணி, பளை.
★ ந.சுப்பிரமணியம் - சரசாலை தெற்கு.
★ வ.கோபாலபிள்ளை - பளை நகரம்.
★ த.செல்லத்துரை - பெரியபளை, பளை.
★ சு.குஞ்சன் - கைதடி தெற்கு.
★ ம.கட்டையன் - கைதடி கிழக்கு.
★ ம.புண்ணியவதி - கைதடி மேற்கு.
★ சி.சங்கரன் - நவபுரம், கைதடிவடக்கு. (ஐ-117)

## யாழ். நூலகப் பகுதியில் பாதீனியம் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 2

யாழ்.நூல்நிலையப் பகுதியில் பற்றையாக வளர்ந்திருந்த பாதீனியம் களை மாநகரசபை ஊழியர்களால் சிரமதானம் மூலம் அழிக்கப்படபட்டு வருகின்றது.

தந்தை செல்வா சதுக்கப் பிரதேசம் முழுவதும் மாநகர சபை ஊழியர்களால் பற்றைகள் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை -

யாழ்.நூல் நிலையத்திற்கு சுற்று மதில் கட்டும் பணியும் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (ஐ-6)

# வடமராட்சி இந்து மகளிரை தேசிய பாடசாலையாக்குக!

## கல்லூரிச் சமூகம் கோரிக்கை

பருத்தித்துறை,ஜூன்2

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைத் தேசியக் கல்லூரியாகத் தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார, இந்து கலாசார அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சின் இணைப்பாளரும் சட்டத்தரணியுமான செல்வி மகேஸ்வரி வேலாயுதம் ஊடாக இக் கோரிக்கையை அனுப்பிவைத்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயப் பகுதியில் தேசியக் கல்லூரி ஒன்று இல்லாத குறையை நிவர்த்தி செய்ய இக் கலலூரியை தேசியக் கல்லூரியாக்குவது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது இக் கல்லூரியில் ஆரம்ப வகுப்பு முதல் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு வரை சுமார் இரண்டாயிரம் மாணவிகள் கல்வி கற்கின்றனர். (ஐ-118,173)

## கைதடியில் வெங்காயச் செய்கை

தென்மராட்சி,ஜூன் 2

கைதடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் வெங்காயப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். வடமராட்சியில் விதை வெங்காயம் கொள்வனவு செய்வதைக் காணமுடிகிறது.

கைதடிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட கீரை வடமராட்சிப் பகுதிச் சந்தைகளுக்குக் கொண்டுவரப்படுகிறது. (ஐ-117)


கொடிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக்குழுத் தெரிவு அறிவித்தல்

29.05.2001 உதயன் பத்திரிகையில் 2ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்யவுள்ள அறிவித்தலில் 223 முத்தட்டுக் கிளை இடம்பெறவில்லை. இக்கிளை 218 இடைக்குறிச்சி, 224 குழுக்கள் ஆகியவற்றுடன் இணைந்த கிளைக்குழுவாக 223 முத்தட்டும் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

சு.கணேசமூர்த்தி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.தெ.அ.)
*யாழ்ப்பாணம்.* (C/16958)



## கலாலயா பயிற்சியகம்

*மணிக்கூட்டு வீதி.* *யாழ்ப்பாணம்.*
*(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)*

***மகளிருக்கான மனைப் பொருளியலும் கைத்திறனும், டிப்ளோமா பயிற்சியும்***

| | |
|---|---|
| கேக் ஐஸிங் | பூவேலை |
| உணவு தயாரித்தல் | FABRIC PAINTING |
| உடை தயாரித்தல் | கூந்தல் அலங்காரம் |
| கைவேலை | முக ஒப்பனை *(FACIAL MAKE-UP)* |

✿ சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்: 03-06-2001 (நாளை)
✿ கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 04-06-2001 (நாளை மறுதினம்)

(C/16957) - *இயக்குநர்*



## திருமறைக் கலாமன்றம்
## கவின் கலைகள் பயிலகம்
## SCHOOL OF FINE ARTS

பின்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகளில் பயில்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- நடனம்
- வாய்ப்பாட்டு
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஓர்கன்
- சித்திரம்

விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 15.06.2001

அதிபர்
*கவின் கலைகள் பயிலகம்.*

திருமறைக் கலாமன்றம்
*238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி-2393. (C/16960)


# பரபரப்புடன் எதிர்பார்க்கப்படும் மக் வேயின் மரண தண்டனை



மக் வே

அமெரிக்காவை உலுக்கிய இரு பெரும் குண்டுவெடிப்புக்களில் ஒக்லஹோமா நகரில் 1995 ஏப்ரல் 19ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் 168 உயிர்களைப் பலிகொண்டிருந்தது. இக் குண்டுவெடிப்பின் சூத்திரதாரியான மக் வே என்பவனின் மரணதண்டனை தான் தற்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

1963இன் பின்னர் அமெரிக்க அரசினால் நிறைவேற்றப்பட இருக்கும் முதலாவது மரணதண்டனை இது ஆகும். இடைக்காலத்தில் நூற்றுக் கணக்கான மரண தண்டனைகள் பல்வேறு மாநிலங்களில் அங்கு நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அவை தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் பெறவில்லை.



மரணப் படுக்கை காத்திருக்கின்றது

மக் வேயின் மரணதண்டனையை முழு உலகமும் பரபரப்புடன் எதிர்பார்த்து இருக்கின்றது. முதலில் அவனது மரண தண்டனை 2001ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி நிறைவேற்றப்படுவதாக தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் அத் திகதி ஜூன் மாதம் 11ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. அத் திகதியிலும் கூட அது நிறைவேறாமல் சறுக்கிவிடக்கூடும் என்ற ஊகங்களும் உலவுகின்றன.

அவனுக்கு தற்போது வயது 32. அவன் ஓர் இராணுவச் சிப்பாயாக வளைகுடா யுத்தத்தில் கடமையாற்றி இருந்தான். அமெரிக்க அரசுடன் விரக்திகண்ட அவனது வெடிகுண்டை ஏந்திய வாகனம் ஒக்லஹோமா நகரின் முக்கிய கட்டடம் ஒன்றின் முன்னால் இலக்குவைத்து நிறுத்தப்பட்டிருந்தது. குண்டு வெடித்தபோது கொல்லப்பட்டவர்கள் 168 பேரில் 19 குழந்தைகளும் அடங்குவர். குழந்தைகள் காப்பகம் ஒன்று அக்கட்டடத்தில் இயங்கி வந்தது.

அமெரிக்க வரலாற்றிலேயே கொடூரமான இச் சம்பவத்துக்காக அவன் இன்றுவரை வருத்தம் தெரிவிக்க மறுத்திருந்தான். கட்டடம் முழுவதுமே ஆட்களால் நிரம்பிய ஒரு தருணத்திற்காக தான் காத்திருந்ததாகத் துணிவுடன் கூறியிருக்கின்றான். வெடிகுண்டு வாகனத்தை நிறுத்திய இடத்தில் குழந்தைகள் காப்பகத்தைக் கவனித்திராத போதும் குழந்தைகளின் மரணம் கூட அவனது மனதைத் தொட்டதாக இல்லை. அரசைப் பழிவாங்கும் தனது முயற்சியில் இழப்புக்கள் போதாது என்றே அவன் இன்றும் கூறிவருகின்றான்.

அவன் தானே தனித்து அக் குண்டு வெடிப்பை நிகழ்த்தியதாகக் கூறியிருந்தாலும் அவனுடன் இணைந்து செயற்பட்ட இருவர் ஆயுட் தண்டனையுடன் சிறையில் இருக்கின்றார்கள்.

திரிகள் எரிந்து குண்டை எட்ட முன்னரே வெகுதூரம் விலகிவிட்ட மக் வே சுமார் அறுபது மைல்கள் தொலைவில் வாகனத்தின் இலக்கத் தகடு கழன்றிருந்ததால் கைது செய்யப்பட்டிருந்தான். சாதாரண குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டவனிடம் அனுமதியில்லாத கைத் துப்பாக்கியும் பிடிபட்டது. கைது செய்யப்பட்டு சிறையில் அவன் இருந்தபோது குண்டு வெடிப்புத் தொடர்பாக அவன் தேடப்பட்டது தெரியவந்தது.

## ஜூன் 11 இல் நிறைவேறுமா?


தற்போது கொலரடோவில் (**Colorado**) உள்ள அதிஉச்ச பாதுகாப்பான சிறையில் அவன் வைக்கப்பட்டுள்ளான். அவனைப்போலவே வேறு மூன்று பெருமெடுப்பிலான கொலைக் குற்றவாளிகள் அங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் அவன் கலந்துரையாடச் சந்தர்ப்பங்களும் கிடைத்தது உண்டு.

1993இல் அமெரிக்காவை உலுக்கிய உலக வர்த்தக நிலைய குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான ரம்ஸி அகமட் யூசுப் (**Ramzi Ahmed Yousef**) கூட அங்கேதான் 240 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் சிறைவைக்கப்பட்டுள்ளான். **Kaczynski** என்ற 57 வயதான விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த ஒரு கொலையாளிகூட அங்கேதான் சிறையில் வாடுகின்றான். அவன் கடிதங்களில் நுட்பமாகக் குண்டு வைத்து அனுப்பி பலரைக் கொன்றிருக்கின்றான். அவன்கூட மக் வேயின் செயலை ஆதரித்ததாக இல்லை.

**மு.சிவநேசன்**

தனது மரணதண்டனையையிட்டு அவன் கவலைப்படவில்லை. தன்னால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தனது மரணதண்டனை நிகழ்வு ஆறுதல் அளிக்கும் விதத்தில் வீடியோவில் காட்டப்படுமானால் அது தேசிய மட்டத்தில் சகலரும் பார்க்கத்தக்க வகையில் ஒளிபரப்பாக வேண்டும் என்பதும் அவனது எதிர்பார்ப்பு ஆகின்றது. மரணத்தின் பின் ஒரு முன்னாள் இராணுவ வீரனிற்குக் கிடைக்கும் அணிவகுப்பு மரியாதை தனக்குக் கிடைக்கப்போவதில்லை என்ற ஏக்கமும் எழாமல் இல்லை.

இறுதி நேரத்தில் அவனது விசாரணை தொடர்பான அறிக்கைகளில் சில பக்கங்களைக் காணவில்லை என்ற செய்தி கசியத்தொடங்கியதால் மரணதண்டனையை சற்று ஒத்திப்போடவேண்டிய அவசியம் அரசுக்கு எழுந்திருக்கின்றது. இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக மில்லியன் கணக்கில் தகவல்கள் உலகம் முழுவதும் இருந்து சேகரிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 23 ஆயிரம் சாட்சியங்கள், இரண்டு லட்சத்து நாற்பதினாயிரம் படங்கள், பல ஆயிரம் பக்க அறிக்கைகள் என்பன அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் பல்வேறு கணனி மையங்களில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.




மக் வே கைதியாக

இவை அனைத்தையும் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் துல்லியமாக ஆராய்வது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இவற்றில் தவறிவிட்டதாகக் கருதப்படும் தகவல்களில் எந்தப் பாரதூரமான அல்லது முக்கியத்துவமுடைய அம்சங்களும் இருக்கவில்லை என்பதும் தெரியவருகின்றது.

தண்டனைக்குத் தயாராகிவிட்ட மக் வே தனது குடும்பத்தினரிடம் பிரியாவிடை பெற்றுவிட்ட பின்பு மீண்டும் ஒரு சந்திப்புக்கான சந்தர்ப்பத்தையோ, நீடிக்கப்பட்ட சிறை வாழ்க்கையையோ வரவேற்கத் தயாரில்லை. அது குறித்த திகதியில் ஒப்பேறிவிட்டிருந்தால் பரவாயில்லையே என்கின்ற மனநிலைதான் அவனிடம் தென்படுகின்றது. அவனை ஒரு ஹீரோவாகச் சித்திரிக்கச் சில சக்திகள் முயலுகின்றன.

அவனது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும் என்பதே 72 வீதமான மக்களின் எதிர்பார்ப்பு என்று தற்போதும் கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்து இருக்கின்றன. எனினும் கண்முடித்தனமாகச் சுட்டுத் தள்ளப்படாமல் தனது உரிமைக்காக வாதிடத்தக்க ஒரு நாட்டிலே அவன் வாழ்ந்து கொண்டிருக்கக் கொடுத்து வைத்தவன். இக் கருத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கடந்த வாரம் தெரிவித்து இருந்தார்.

அவனது மரண தண்டனையை நிறைவேற்றக் காத்திருக்கும் சொகுசு படுக்கையையே படத்தில் காண்கிறீர்கள். இன்னமும் பயன்படுத்தப்படாத இந்த அதிநவீன கருவி மக் வேயின் உயிரைக் காவு கொள்ளுமா?

*

# ஜனாதிபதி ஆட்சி முறை உள்ள வரை சமாதானத் தீர்வு எட்ட முடியாதது!

## சர்வமதக் குழு பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்2

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறையை வைத்துக்கொண்டு சமாதானத் தீர்வு காண்முடியாது.

சர்வமதக் குழுவைச் சேர்ந்த விமலரட்ண நாயக்கதேரர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வமதக் குழுவினருக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரத் தீர்வு, அரசமைப்பை மாற்றுவதன் மூலமே கிடைக்கும் என்று சர்வமதத் தலைவர்கள் சார்பில் விமலரட்ண நாயகதேரர் மேலும தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சர்வமதக் குழுவின் சார்பில் விமலரட்ண நாயகதேரர், சோபீததேரர், அனுராதபுரம் ஆயர் ஒஸ்மல் கோபில், அருட்தந்தை எபினேசர் ஜோசப், கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் பிரதம குரு குஞ்சிதபாதக் குருக்கள், மருதானை கப்பித்தாவத்தை பிள்ளையார் கோயில் பிரதமகுரு சண்முகரட்ணசர்மா, மௌலவி கிர்தூர் ரஹ்மான் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அரசியல் கட்சிகளின் சார்பில் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு. ஜயசூரியா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி, தமிழ்க் காங்கிரஸின் குமரகுருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வமதக் குழுவினர் மேற்கொள்ளும் சமாதானத்துக்கான முயற்சிகளில் அனைத்துக்கும் ஐ.தே.க. ஆதரவளிக்கும் என்று கரு.ஜயசூரியா சர்வமதக் குழுவினரிடம் உறுதியளித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதே கருத்தைத் தெரிவித்தது.

இந்தக் கலந்துரையாடலுக்கு ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அவை எவையும் கலந்து கொள்ளவில்லை. (ஐ-ஒ-3)

## வன்னி புதுக்குடியிருப்பில்

# மல,சல வாயில்கள் இன்றி பிறந்த குழந்தைக்கு சிகிச்சை

புதுக்குடியிருப்பில் மல,சல வாயிலகள் இல்லாது ஒரு குழந்தை பிறந்துள்ளது. நேசன் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் விமல்ராஜ் - சுபாஷினி தம்பதியினருக்கு கடந்த மே மாதம் 25ஆம் திகதி பிறந்த குழந்தையே மல, சல வாயில்கள் இன்றி பரிதாபமான நிலையில் பிறந்துள்ளது. இந்தக் குழந்தைக்கு மலம், சலம் ஆகியவை வாய் வழியாக தற்போது வெளியேற்றப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மருத்துவமனைகளில் ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்ட பின், மேலதிக சிகிச்சைக்காக இந்தக் குழந்தை வவுனியா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளது. (ஐ-ஒ)

# வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்.செயலக மோட்டார் வாகனப் பிரிவினால் அண்மைக் காலத்தில் 789 பேருக்கு வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மோட்டார் வாகனப் பிரிவினால் அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சார்த்த வாகன செலுத்துநர் தெரிவில் சித்தியடைந்தவர்களுக்கே இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்த வாகன செலுத்துநர் தெரிவில் ஆயிரத்து 100 பேர் பங்குபற்றிய போதிலும் 789 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

வாகன பரிசோதனை அதிகாரி கொழும்பு சென்றுள்ளமையால் பரீட்சார்த்த வாகன செலுத்துநர் தெரிவு தற்சமயம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் பரிசோதனை அதிகாரி யாழ்ப்பாணம் திரும்பியதும் ஜூலை மாதத்தில் இருந்து இத் தெரிவுகள் மீண்டும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# அறவழிப் போராட்டக் குழுவின் அலுவலக கட்டடங்கள் சேதம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

தென்மராட்சிப் பகுதியில் கடந்த வருடம் மூண்ட யுத்தத்தினால் கைதடி, நுணாவில்ப் பகுதியில் இயங்கிய அறவழிப் போராட்டக் குழுவின் கட்டடங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

அறவழிப் போராட்டக் குழு பணிமனை மற்றும் கேட்போர் கூடம், நூலகம் போன்ற கட்டடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. அங்கிருந்த தளபாடங்கள் உட்பட நூலகத்தில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்களும் காணாமற போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அங்கு சென்ற அறவழிப் போராட்டக் குழுவின் நிர்வாகிகள் மேற்படி சேத விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

இந்தக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபா தேவைப்படும் என்றும் அவர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். (ஐ-5)

# உயர்கல்வியை முடித்துக்கொண்டு வன்னிக்குச் சேவைபுரிய வாருங்கள்

## கிளிநொச்சி அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியை முடித்துக் கொண்டுவரும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் சேவை மனப்பான்மையுடன் தமது பிரதேசத்திற்கே சேவையாற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஏ. ஐயாத்துரை யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டதும் பல மாணவர்கள் தமது பிரதேசத்துக்கு வந்து சேவையாற்றப் பின்னடிக்கின்றனர். இதே வேளை ஒருசில மாணவர்கள் சேவை மனப்பான்மையுடன் வேறு இடங்களில் வேலை கிடைத்தாலும் அவற்றை இரத்துச் செய்து விட்டு தமது பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற்று சேவையாற்ற வருகின்றார்கள். இவர்களைப் போல் ஏனையோரும் கல்வியை முடித்துக்கொண்டு உங்கள் பிரதேசத்துக்குக் கடமையாற்ற வாருங்கள்.

உங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்துதர நானும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களும் தயாராக இருக்கிறோம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான பாடக் குறிப்புகள் கிடைப்பதில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் போதியளவு கிடைக்கின்றன. எனவே உங்கள் சகோதரர்களின் கல்வி வளர்ச்சிக்காக இங்கு கிடைக்கும் பாடக்குறிப்புக்களை வாங்கி மாணவர் ஒன்றியத்தின் ஊடாக அனுப்புங்கள். இதற்காக மாதம் 3 ஆயிரம் ரூபாவை கல்வி மேம்பாட்டு நிதியத்தில் இருந்து ஒதுக்கித் தருகின்றேன்.

இடம்பெயர்வுக்கு முன்னர் கல்வி மேம்பாட்டு நிதி பெருமளவில் இருந்தது. தற்போது நிரந்தர நியமனம் கிடைக்காத பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க அந்த நிதி பயன்படுத்தப்படுவதால் அது குறைந்துள்ளது.

உங்களுக்குரிய கல்வி மேம்பாட்டு நிதியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம்.

கிளிநொச்சி மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் பெரும் சிரமப்படுகின்றார்கள். ஒரு பக்கம் பொருளாதாரத்தடை. ஒரு போத்தல் மண்ணெண்ணெய் 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. வீதிகள் அனைத்தும் குன்றுங் குழியுமாகக் காணப்படுகின்றன. போக்குவரத்துச் செய்வதற்கு போதிய வாகன வசதிகள் இல்லை.

### தளபாடங்கள் இல்லை

பாடசாலைகளில் தளபாடங்கள் இல்லை. இலவச பாட நூல்கள் போதுமான அளவில் கிடைப்பதில்லை. அனுப்பப்படும் பாட நூல்களும் காலம் தாழ்த்தித்தான் கிடைக்கின்றன. பாடசாலை சீருடைகளும் அவ்வாறே. யுத்த சூழ் நிலையால் கிளிநொச்சி மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மீன்பிடியியல் டிப்ளோமா, உடற்கல்வி டிப்ளோமா மற்றும் இராமநாதன் நுண்கலைப்பீட கற்கை நெறிகளுக்கு கிளிநொச்சி மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது மிகவும் குறைவாகவே உள்ளது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் தொடர்பாடல் வசதிகள் சீராக இல்லாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது —என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# நன்றி தெரிவிப்பு

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 18 — 09 — 1972 ஆம் ஆண்டு தொடக்கம் வேலுப்பிள்ளை நடராசா ஆகிய நான் வகித்த பதவிகளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வேலை செய்து எதிர்வரும் 10 — 06 — 2001 ஞாயிற்றுக்கிழமையன்று (29) இருபத்தொன்பது வருடங்கள் சேவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறுகின்றேன். எனக்கு ஒத்துழைப்புத் தந்த பணிப்பாளர்சபை/ பணியாளர்கள்/ கிளைக்குழு/ சங்க அங்கத்தவர்கள்/ பாவனையாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேற்படி சங்கத்தில் என்னால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் சிக்கன சேமிப்புக் கடன் உதவிச் சங்கத்தைத் தற்போதைய ஊழியர்களும் எதிர்கால ஊழியர்களும் நன்மை பெறக்கூடிய வகையில் தொடர்ந்து பேண வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சங்க ஊழியர்களால் நடத்தப்படும் புது றோட், கிழவின் காடு முருகன் கோயில் 5 ஆம் நாள் அலங்காரத் திருவிழா உபயத்தை, தொடர்ந்தும் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல முருகனை வேண்டிக்கொண்டு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி.

**வே. நடராசா**
கிளை மேற்பார்வையாளர்,
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.

[88464]

# ஈராண்டு நினைவலைகள்



புவியில் 03 — 12 — 1950

விண்ணில் 26 — 05 — 1999

## திருமதி தர்மலிங்கம் யோகாம்பிகை

ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் நினைவு என்றென்றும்
எங்களை விட்டு நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
- கணவர், பிள்ளைகள்.

''யோக வாசம்''
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(88558)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும். அன்று நபிகள் நாயகம் பிறந்த தின விழாவும் அங்கு கொண்டாடப்படும்.

'தத்துவ நெறியும் ஆன்மீக வாழ்வும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி பூர்ண உரோ மகேஸ்வரன் உரையாற்றுவார்.

நண்பகல் நாராயண சேவை இடம்பெறும். (ஐ)

# தேவை

தொழிலாளி (ஆண்)
வயதெல்லை:-
40 வயது
விண்ணப்ப முடிவு:-
15-06-2001
பதிவாளர்,
லங்கா
சித்த ஆயுர்வேத,
மருத்துவக் கல்லூரி.
127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(88569)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பொதுமுகாமையாளர்
செல்வி சீவரத்தினம் சபாரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மகேஸ்வரி சபாரத்தினம்

அவர்கள் 27-05-2001 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பணியாளர்கள்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(88554)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தணிகாசலம் சின்னமணி

குடத்தனை வடக்கைச் சேர்ந்த தணிகாசலம் சின்னமணி அவர்கள் நேற்று (01-06-2001) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தணிகாசலத்தின் அன்பு மனைவியும் மகிமதாஸ், தர்மதாஸ் (முன்னாள் கிராமசேவை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. மகிமதாஸ் (மகன்)
குடத்தனை வடக்கு,
குடத்தனை.

(சி/16956)

## செல்வநாயகம் சற்குணானந்தன் (சற்குணம்)

(உரிமையாளர், வீனஸ் டெல்க்கா)

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செ. சற்குணானந்தன் நேற்று 01- 06- 2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்,

தகவல்:
N. தியாகராஜா (தியாகு)
இல.11, பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

(88566)

## எஸ். பஸ்ரியாம்பிள்ளை

[உரிமையாளர் — நீர்கொழும்பு, சீப்சைட்]

கருவிலைச் சேர்ந்த, கரம்பொன் நீர்கொழும்பை வதிவிடமாகக் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை அவர்கள் நேற்று [01—06—2001] வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் செபத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - வீக்டோறியா தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மற்றும் பேபி தம்பதிகளின் அருமை மருமகனும், வினோதன், திருமதி லாலினி கிறிஸ்டி, சஞ்சேயன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், எஸ். இ. ஐயாத்துரை, மேரிமாகிறட், யோசபின், விக்டர், கிறிஸ் சோஸ்ரம், பிரான்சிஸ்கா, புஸ்பம் ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
விக்டர் யோசவ் [சகோதரன்].
108, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[88564]

## சிற்றம்பலம் தங்கத்துரை

துன்னாலை, பொன்னம் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தங்கத்துரை (முன்னாள் கணக்காளர்), யாழ். மாநகரசபை; முன்னாள் தலைவர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூட்டுறவுச் சங்கம்) 29- 05- 2001 அன்று காலமானார்.

அன்னார் மோட்சியாவதியின் அன்புக் கணவரும் (HOLLAND), சரவணபவனின் அன்புத் தந்தையும், வாசுகியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29- 05- 2001 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஒடக்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரவணபவன் (மகன்)
பொன்னம் தோட்டம்,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
Tel No. 01-852269

(88563)

# இளைய தலைமுறைக்கு நமது வரலாற்று கதைகளைக் கூறும் சிறந்த படைப்பு பூதத்தம்பி

தேவரையாளி இந்துக் கல்லூரியின் கட்டட அபிவிருத்தி நிதிக்காக 2001.02.17 அன்று சனிக்கிழமை கல்லூரியின் திறந்த வெளிஅரங்கில் நடத்தப்பட்ட நட்சத்திர இரவில் பல வகையான கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. எந்த ஒரு நிகழ்ச்சியையும் குறைத்துக் கருத்துக் கூறமுடியாத அளவுக்கு நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக அமைந்திருந்தன. அவற்றில் 'பூதத்தம்பி' ரசிகர்கள் மத்தியில் பாராட்டுதலைப் பெற்றதோடு இன்னொரு தடவை பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்காதா? என்ற ஓர் அங்கலாய்ப்பைப் பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டது.

இந்த நாடகத்தில் பொருத்தமான ஏற்ற, இறக்கங்களுடன் இணைந்த உரையாடல்; சோகத்தையும் வீரத்தையும் அள்ளி வீசும் ராகங்களோடு இணைந்த பாடல்களும்; உரையாடல்களுக்கும், பாடல்களுக்கும் எதுவித இடையூறுமில்லாத வாத்தியப் பயன்பாடும்; பொருத்தமான உடையமைப்பும்; பாத்திரங்களின் தன்மைகளுக்கேற்ற நடிப்பும் ஒருங்கமைந்து காணப்பட்டது. இந்த நாடகத்தை இறுதிவரை பார்த்து, ரசித்து வியந்தவர்களில் இளைஞர்களும், சிறுவர்களும் அடங்குவர்.

அட்மிரல் அந்தோனியாகப் பாத்திரமேற்ற அல்வாயூர் ச.சிங்கராசா பாத்திரத்துக்கேற்ற தோற்றத்தைக் கொண்டிருந்ததோடு மாத்திரமல்ல, பூதனிடமும் அந்திராசியிடமும் ஆலோசனை பெறும் காட்சிகளிலும், அந்திராசியின் வஞ்சக வலையில் சிக்கி பூதன் மேல் ஆத்திரமடையும் சந்தர்ப்பத்திலும், பூதனுக்குத் தண்டனை வழங்கும் காட்சியிலும் சிறப்பாக நடித்துத் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

பூதத்தம்பியாக மேடையில் தோன்றிய அல்வாயூர் மா.ஆனந்தராசன் அழகவல்லியிடம் தனதன்பை வெளிப்படுத்தியமை, அந்திராசியுடன் தனக்கு ஏற்பட்ட நட்பில் களங்கம் ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் காட்டிய அக்கறையை வெளிப்படுத்தியமை, அட்மிரல் அந்தோனியிடம் தான் கொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தியமை அவரிடம் நடிகனுக்குரிய திறன்கள் நிறையவே உண்டு என்பதைத் தெளிவாகக் காட்டி நின்றது.

**சீ.சாந்தநாதன்**

ஒவ்வொரு காட்சியிலும் அவர் காட்டிய முகபாவனைகளும், பாடல்களைப் பாடும் போது அவர் காட்டிய அங்க அசைவுகளும் தான் ஒரு சிறந்த நாடக நடிகன் என்பதையும், எந்தப் பாத்திரத்திலும் சிறப்பாகத் தன்னால் நடித்துக் காட்ட முடியும் என்பதையும் இந்நாடகத்தின் மூலம் தெளிவாக்கியுள்ளார். காடசிக்குக் காட்சி இவரது நடிப்பு மெருகேறிச் சென்று கொண்டிருந்ததை அறிந்த ரசிகர்கள் இவரது நடிப்பைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அந்திராசியின் பாத்திரத்தை ஏற்று நடித்த வி.கே.பாலசிங்கம் (வி.கே.பி) பாடும் போதும், உரையாடும் போதும் தனது அங்க அசைவுகளின் மூலம் ஆசை, கோபம், ஆச்சரியம், நயவஞ்சகத்தனம் போன்ற உணர்வுகளைப் புலப்படுத்திச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டார். கலாபூசணம், கலைமகிழ்நன் என்ற இரு பட்டங்களுக்கும் மிகப் பொருத்தமானவர் என்பதைத் தான் தோன்றிய ஒவ்வொரு காட்சியிலும் இவர் தத்ரூபமாக நடித்துக் காட்டுவதில் தவறுவிட்டதாகத் தெரியவில்லை.

பாரம்பரிய கலைகள் அழிந்து விடக் கூடாது எனக் கருதுபவர்களில் அரியாலையூர் நடிக கலாமணி வீசெல்வரத்தினம் இன்றும் மிக உறுதியாக இக்கருத்தை ஆதரிக்கிறார். பார்வையாளர்களுக்கு அழகவல்லியைத் தன் மூலம் காண்பிக்க முனைந்த இவர் தான் இதுவரை காலமும், கற்றறிந்த, கேட்டறிநத, கண்டறிந்த ஞானத்தைப் பயன்படுத்தி தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தி சபையோரை ஆச்சரியப்பட வைத்துள்ளார். முகபாவனையால், கண் இமை அசைவுகளினால், நெற்றிச் சுருக்கத்தினால், புருவ வளைவுகளினால, தெளிவான உரையாடலினால், மனதை ஈர்க்கும் பாடல்களினால் இன்ப - துன்ப - சோக - கோப உணர்வுகளை வெளிக் காட்டிய விதம் அற்புதம்.

தூதுவர்களாக மேடையில் தோன்றிய அல்வையூரைச் சேர்ந்த சி.கணேசலிங்கம், க.குணரத்தினம் ஒவ்வொரு காட்சியையும் சிறப்பாகப் பயன்படுத்தி இருந்தார்கள். ரசிகர்களைத் தாராளமாகச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார்கள். பாடல்களைக் கூட தாள, ராகஞானத்துடன் ரசிக்கக்கூடிய முறையில் பாடியிருந்தார்கள். வேறு பெரிய பாத்திரங்களைக் கூட ஏற்று இரசிகர்களைக் கவரும் வண்ணம் நடிக்கும் ஆற்றல் இவர்களிடம் உண்டு எனப் பலரும் கருத்துத் தெரிவித்துக் கொண்டிருந்ததை கேட்கக் கூடியதாக இருந்தது. கவிஞரின் ஊரில் பிறந்தவர்கள் அல்லவா? சளைத்தவர்கள் என எளிதாகக் கூறி விட முடியாதே.



'பூதத்தம்பி' நாடகத்தில் மா.அனந்தராசன் பூதத்தம்பியாகவும், வி.செல்வரத்தினம் அழகவல்லியாகவும் தோன்றும் காட்சி.

ஒட்டு மொத்தத்தில் 'பூதத்தம்பி' எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டுவிட்டது. இளவயதினரும் இவ்வாறான வரலாறுகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பரவலாக ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். பாரம்பரிய கலைகளை வளர்ப்பதற்கு இது போன்ற முயற்சிகள் அவசியமாகின்றன. கலை வளர்ச்சிக்காகப் பாடுபடும் ஒவ்வொரு வரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்; கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். ஏனெனில் பாரம்பரியக் கலையும் ஓர் இலக்கிய வகை தானே? பூதத்தம்பி நாடக மரபு வளர்க.

*

## கலைச்சுடர்

தயாரிப்பு:-நர்த்தகன்

# சங்கை நகரில் ஒரு சங்கீதப் பிரவாகம்

வரண்ட கோடையில் திடீரென வெண்மேகங்கள் திரண்டு கருமை கொண்டு கடுமழை பொழிவது போல இனிமையானதொரு இசையொலி வலி.மேற்கின் சங்கானைப் பட்டணத்தில் ஒலித்தது. சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாளின் ஆலய திருப்பணி நிதிக்காக ஒழுங்கமைக்கப்பட்ட மாபெரும் கலை அரங்கிலேயே ஒரு சங்கீதத் தென்றல் மையம் கொண்டிருந்தது. மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபையினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நிறைஞ்சனாஸ் திரையரங்கில் திசையெட்டும் மணம் கமழ மொட்டு அவிழ்ந்த நவீன இசை நிகழ்வு நாட்டிய நாதஸ்வர சங்கமம் என பெயர் பெற்றது.

நிறைவான அரங்கு வசதிகள் கொண்ட புதிய நிர்மாணிப்பான "நிறைஞ்சனாஸ்" திரையரங்கில் அன்று என்றும் இல்லாத நிறைவான ஓர் இசை சங்கமம் சம்பவித்தது. நீண்ட காலமாக வலி.மேற்கின் சங்கீதப் பிரியர்களுக்கன்றி யாழ்ப்பாண மக்களுக்குமே அனுபவிக்கக் கிடைக்காத இசை வேளை 07-04-2001 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் சூரிய அஸ்தமனம் வரை அன்று கிடைத்தது.

இசை உணர்வுகள் தம் இதயத்தின் சூழலில் அஸ்தமித்து விட்டனவோ என இசைப் பிரியர்கள் இன்னல் கொண்ட காலத்தில் மின்னாமல் முழங்காமல் மழை பொழிவது ஒத்து இச் சங்கீதப் பிரவாகம் சங்கை நகரில் பிரசவித்தது. சூரிய அஸ்தமனத்தில் சந்திரோதயம் கண்ட சந்தோஷம் சங்கீதப் பிரியர்களுக்கு. கலைஞர்களும் கலாரசிகர்களும், பாமரனும் பண்டிதனும் யாழ். மண்ணின் இசை நலம் கண்டு திருப்தியும் பெருமையும் அடைந்த கோலம் காண்பவருக்கும் காட்சியை ஒழுங்குபடுத்தியோருக்கும் களிப்பைத் தந்தது.

கலை உலகில் இன்று நாதத்தின் சிகரமாக விளங்கும் கலாசூரி என்.கே.பத்மநாதன் அவர்களும் நர்த்தனத்தில் இமயம் எனத் துலங்கும் திருமதி கிருஷாந்தி இரவீந்திரா அவர்களும் ஆக இருவரும் இணைந்தளித்த உருப்படிகள் நிகழ்வின் சிகரம் என்றே சொல்ல வேண்டும்.

இறைவன் திரு உலா வரும் போது இயையும் மல்லாவி இசை வடிவம் கலாசூரி பத்மநாதன் அவர்களின் நாத வாத்தியத்தில் நயத்தெழ அவ்வோசைக்கு அசையும் உருவம் ஆக்கி அளித்து சபையை அசர வைத்தார் கிருஷாந்தி அவர்கள். கூடவே நந்தியின் மத்தள ஓசையின் எக்காளத்தோடு லயஞானவாரிதி எஸ்.மகேந்திரனின் மிருதங்கவோசை நாதநர்த்தனத்தின் கனத்தை மண்ணில் இருந்து விண்ணுக்கு உயர்த்தியது.

தாளம் தவறாத பத பிரியோகம், அபிநய அடைவுகளின் அலாதியான நிலை - நடன மங்கையர்கள் - தம் குருவிற்கு வழங்கிய குரு தட்சணையாக நர்த்தன நிலையில் அமைந்தன. அரங்கை அரங்காது இருந்து கண்களிக்க வைத்த நடன அணங்குகளின் ஆற்றல் மேலும் வளரட்டும். கூடவே அவர்கள் உருவிலும் நெடுமாலாய் வளர வேண்டும். இடைவேளைகள் இசைவேளைகளாக வந்து இசையாளர்கள் செல்வி கனகாம்பரி பத்மநாதன், செல்வன் ரி.றொபேட் ஆகியோரின் குரல் இனிமைகளை இனிதே வெளியிட்டன. ஒத்திசையாக இவ்வேளைகளில் ஒலித்த செல்வி பாக்கியலஷ்மி நடராஜா அவர்களின் வயலின் வாத்தியம் பெரும் விந்தைகளைப் புரிந்தது. இசைவடிவங்களுக்கு ஒரு மெருகும் ஊட்டியது.

இந்த வேளையில் இசைப்பிரியர்களின் நெஞ்சங்களில் மறக்காமல் இடம் பிடித்தவர்கள் வளர்ந்து வரும் இளங்கலைஞர்களாகிய நாத வித்துவான் திரு.ஆர் சிவகுமாரனும் லய வித்துவான் (தவில்) செல்வன் எஸ். தெட்சணாமூர்த்தியுமாவார்.

**தி.சிவதட்சணாமூர்த்தி**

இணை வாத்தியமாக நாத இசை வழங்கிய திரு.ஆர்.சிவகுமாரன் வலி. மேற்கு கலா ரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரம். தவில் வித்துவான் எஸ். தெட்சணாமூர்த்தியின் கைவண்ணத்தில் வெளிப்பட்ட சில சங்கதிகள் சத்தான இவரது எதிர்கால வளர்ச்சியை திடகாத்திரத்துடன் காட்டி நின்றது.

இந்தக் கலை நிகழ்வில் துடுக்குடன் இடம்பெற்ற ஒரு நர்த்தன நிகழ்வு சிவநடனம் என்றே கூற வேண்டும். வேகமான பாத அசைவுகள், அதற்கேற்ற நயன நளினங்கம், பாலப்பிரியோகம், அபிநய நிலைகள் சிவனின் உத்தர நிலைக்கு உத்தரங் கூறின.

ஒரே கர்நாடகம் என்று ஸ்ரீமான் பொது ஜனம் கோபித்து விடுவார் என்ற காரணத்தாலோ அல்லது துள்ளிசை தான் எல்லோரையும் தாளம் போட வைக்கிறது என்ற வகையிலே ஏற்பாட்டாளர்கள் யாழ்பல்கலைக் கழக மாணவர்கள் பலர் இணைந்து வழங்கிய துள்ளிசை நிகழ்வினையும் ஒழுங்கு செய்திருந்தார்கள். இசையரங்கமே அவ்வேளையில் இளைய தலைமுறையினரால் நிரம்பி வழிந்தது. மேலைத்தேய வாத்தியங்களை வளத்துடன் கையாளக்கூடிய ஆற்றலை நம் தமிழ் இளைஞர்களிடையே வெளிப்படுத்திக் காட்டிய நிகழவாக பல்கலைக்கழக மாணவர்களின் "தேன் இசைத் தென்றல்" மெல்லிசை நிகழ்வு அமைந்தது.

தமிழர்களின் பூர்வீகக் கலைகளை வளர்க்கும் வகையில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் குடாநாட்டில் நாளை பரதநாட்டிய அரங்கேற்றம் ஒன்று நடைபெறவுள்ளது.



நாட்டியக் கலைமணி செல்வி அகல்யா சுந்தரத்தின் மாணவியான செல்வி எலிசபெத் சுபத்திரா பீற்றர் சிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றமே நாளை காலை 9.35 மணிக்கு சட்டநாதர் வீதி, நல்லூரில் உள்ள இளங்கலைஞர் கலா மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீடத்தைச் சேர்ந்த கலாநிதி சபா ஜெயராசா, திருமதி கிருஷாந்தி இரவீந்திரா ஆகியோரும், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் கலந்துகொள்வர்.

**யாழ்.திருமறைக் கலா மன்றம் தயாரித்து வழங்கிய "காவிய நாயகன்" என்ற திருப்பாடுகளின் காட்சி நிகழ் வில் இடம்பெற்ற ஒரு காட் சியை இந்தப் படத்தில் காணலாம். இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-17-7)**





**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் அண்மையில் நடத்திய கலைவிழாவில் 'மேலும் கீழும்' என்ற நகைச் சுவை நாடகம் 50ஆவது தடவையாக மேடையேறியது. இந்த நாடகத்தில் மேற்படி வித்தியாலய அதிபர் ஆ.சி. நடராஜாவும் செல்விகளான இ.தர்சினி, சி.சிவரஞ்சினியும் தோன்றும் காட்சி. (ஐ-133-7)**

# நன்றி செலுத்தும் ஆராதனை

பூமியில் அவதரிப்பு
06 - 10 - 1923



ஆண்டவரின் மகிமைக்குள்
30 - 04 - 2001

## திருமதி குளோறி பாக்கியம் வேலுப்பிள்ளை

**எம்மை வளர்த்து ஆளாக்க**
**உம்மை அர்ப்பணித்த அன்புத் தாயே!**
**எம்மை விட்டு ஆண்டவரின் மகிமைக்குள் பிரவேசித்த**
**உமது வாழ்வுக்கு இவ் ஆராதனை நன்றியாகட்டும்**

*"நின்பாதம் துணை அல்லால் வேறொரு*
*துணையில்லை, நித்ய பரம போதா!"*

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று (02-06-2001) சனிக்கிழமை 11.30 மணிக்கு நடைபெறும் ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*326, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*

ஜெபரஞ்சனி,
ஜெபானந்தி,
ஜெபானந்தன்,
ஆனந்தசெல்வம்.

(88530)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1978 - 01 - 06



உதிர்வு
2000 - 06- - 12

## திருமதி சி.சாந்தினி

திதி: 02-06-2001

நெஞ்சம் கனக்குதம்மா நிலைகெட்டுத் தவிக்குதம்மா
பிஞ்சு மழலை இங்கே பிதற்றி அழுகுதம்மா
பஞ்சிலும் நோகா நெஞ்சமே சாந்தினி ...
எந் நாளும் உன்நினைவே எமக்குள் இருக்குமடி
**உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை**
**வேண்டிநிற்கும்**

*'கிளான்'*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*

அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி,
மகன்.

(88470)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 - 04 - 1942



மறைவு
15 - 05 - 2000

## திருமதி ஞானேஸ்வரி சிவராசா

(ஆசிரியை, அச்சுவேலி மத்திய கல்லூரி)

எமது இல்லத்தில் இன்று (02. 06. 2001) சனிக்கிழமை காலை 10. 00 மணிக்கு முதலாம் ஆண்டுத் திவசம் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ.சிவராசா (கணவர்)
சி.ரஞ்சித்ராஜ் (மகன்)
யோ.ரஞ்சினிதேவி (பெறாமகள்)

*நாவலம்பதி,*
*அச்சுவேலி.*

(88307)

## இளைஞர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி,ஜூன்2

உறவினர் வீட்டுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணிக்கு கரவெட்டி சம்பந்தர் கடைப் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசன கிருஷ்ணராசா (வயது 17) என்பவரே தாக்குதலுக்குள்ளாகி முகத்தில் வெட்டுக்காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-117)

## நாயைத் திருடியவர் மடக்கப்பட்டார்

நவாலி,ஜூன்2

நவாலியில் பட்டப் பகல் வேளையில் விலை உயர்ந்த நாயைக் கடத்திச் செல்ல முயன்றவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை மாலை நவாலி கிழக்கில் உள்ள ஒரு வீட்டிலிருந்து உயர்இன நாயை ஒரு நபர் தூக்கிச் சென்றதாகவும் -

அந்தச் சமயத்தில் தற்செயலாக அதனைக் கண்ட வீட்டுச் சொந்தக்காரர் நாயைத் தூக்கிச் சென்றவரை மற்றவர்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்து நாயை மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-100)

## வெள்ளைப் பூரானால் கடியுண்ட சிறுவன்

தென்மராட்சி,ஜூன்2

வெள்ளைப் பூரானால் கடியுண்ட சிறுவனுக்கு பார்வை வைத்தியம் பார்த்துக் குணப்படுத்த முடியாது போகவே ஆபத்தான நிலையில் சிறுவன் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டான்.

பருத்தித்துறை தம்பசிட்டியில் கடந்த புதன்கிழமை இச்சிறுவன் வெள்ளைப் பூரானால் கடியுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் கஜேந்திரன்(வயது6) என்னும் இச்சிறுவன் ஆபத்தான நிலையில் இருந்ததால் அம்புலன்ஸ் மூலம் மந்திகை ஆஸ்பத்திரியில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கபபட்டான். (உ-117)

## ஆங்கிலக் கருத்தரங்கு

யாழ்.ஆங்கிலப் படிப்புகள் வட்டம் ஏற்பாடு செய்துள்ள ஆறாவது கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'ஜி.சீ.ஈ. உயர்தரம் ஆங்கிலம் - யதார்த்தமான அணுகுமுறைகள்' என்ற தலைப்பில் கருத்துரைகள் இடம்பெறும்.

'இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள்' என்ற தலைப்பில் ரி.நாகரட்ணம் உரை நிகழ்த்துவார்.

'ஆங்கில மொழித் திறன்கள்' பற்றி திருமதி சாந்தி விக்னராசாவும், 'ஆங்கில நூல்களில் காணப்படும் கவிதைகள்' என்ற தலைப்பில் சோ.பத்மநாதனும், 'ஆங்கில வாக்கிய அமைபபுக்களும், பரீட்சை நுட்பங்களும்' என்ற தலைப்பில் சு.சுந்தரேஸ்வரனும் கருத்துரை வழங்குவர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## சட்ட விரோதமாகச் செல்வோர் அதிகரிப்பு

கொழும்பு,ஜூன்2

நீர்கொழும்பில் இருந்து படகுகள் மூலம் சட்ட விரோதமாக வேறு நாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பவர்களின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருகிறது.

கடந்த மே மாதத்தில் மட்டும் சுமார் 350 பேர் இவ்வாறு புறப்பட்டுச் சென்றதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-10)


# தேவை

*தனியார் மருத்துவமனைக்கு பெண் பிள்ளை (உதவியாளர்) தேவை.*

*தொடர்பு:-*

விளம்பர இல:- 1294
மே/பா உதயன்
யாழ்ப்பாணம்.

(88430)



# எண் சோதிடம்

மாணவர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், வெளிநாட்டுப் பிரயாணிகள், நோயாளர்கள், திருமணமாகாதவர்கள், காதலர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள், கஷ்ட நிலையில் உள்ளவர்கள் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் பிரச்சினைகளையும் அபிலாசைகளையும் குறிப்பிட்டு எழுதுங்கள். எண் சோதிடக்கலையின் அதிர்ஷ்ட இரகசியங்களைப் பயன்படுத்தி, திட்டமான, அதிர்ஷ்டகரமான, நல்வாழ்வுக்கு வழி வகுத்துத்தருவோம். இன்றே ஆங்கில பிறந்த திகதி, பெயர், கையொப்பம் இட்டு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கடித உறையுடன் விண்ணப்பிக்கவும்.

*சனி. ஞாயிறு மட்டும் நேரில் சந்திக்கலாம். காலை 8 மணி முதல் 2 மணி வரை.*

*எண்கலை ஆசான்*
*சி.சி.கே.ஸ்ரீராஜராஜேஷ்வரன்*
*வித்தனை வீதி,*
*வல்வெட்டித்துறை.*

(88520)


உ
புவனேஸ்வரி அம்பாள் துணை
"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞான குரு வாணிபதம் நாடு"

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 - 07 - 1943



விண்ணில்
14 - 05 - 2000

## செல்வி பொன்னம்பலம் கமலாதேவி

(முன்னாள் ஆசிரியை, யா/இணுவில் இந்துக்கல்லூரி)

திதி: பூர்வபக்க ஏகாதசி

**வருடம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்**
**அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்**
**திகழ்ந்து நின்ற வேளை தேவுலகு வரவேற்க, தேவரெல்லாம்**
**உபசரிக்க, பூவுலகு விடைகொடுக்க புவனேஸ்வரி பாதம்**
**அடைந்தனையோ அக்காவே!**

பொ.பாலசுப்பிரமணியம்,
*"கமலாம்பிகை பவனம்"*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(88512)

# நெஞ்சகலா ஓராண்டு நினைவுகள் சூடுகின்றோம் தங்களுக்கு ஏற்றிடுங்கள்!



புவி வாழ வந்தீர்கள்
1920-03-25

விதி சூழச் சென்றீர்கள்
2000-05-15

திருமதி

## கண்ணம்மா வல்லிபுரம்

திதி: 02-06-2001 பூர்வபட்ச துவாதசி

**ஆண்டு விஷு மாதமாம்வை காசிபத்து ஒன்பதிலே**
**பொங்குபூர்வ பட்சதுவாதசித் திதியில் - வாழ்வு**
**போதுமினி என்றுணர்ந்தோ கண்ணம்மாவும் சிவனுடைய**
**வீடுதனிற் குடிபுகுந்தார் தாம்.**

**அம்மா தாயே!**

**மறவாத நினைவொன்று மனதினிலே நாம் வரைந்து**
**தவறாம லுங்களையே தினந்தினமும் எண்ணுகின்றோம்**
**நிறைவாக எம்மையாக்கி நல்வாழ்வு எமக்குத்தந்த**
**அணையாத ஒளித்தாயே! உங்களை நாம் மறக்கமாட்டோம்.**

*கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(88303)

# இந்த வார இராசி பலன்

## 3-6-2001 - 9-6-2001

**13- 06- 2001 இல் வியாழ மாற்றம் வரும்.**

| | | | |
|---|---|---|---|
| | வெ | சூ ◄ :னி வி புத | ரா |
| | இராசிச் சக்கரம் | | சந் |
| | | | |
| செவ் கேது | | சந் | |

### மாற்றம்

அரசியலில் உச்சக்கட்ட அழுத்தம் ஏற்படும். உலக நாடுகள் இருபகுதியினரையும் ஒரு நிலைப்பாட்டிற்கு கொண்டு வரும். அலட்சியம் செய்பவர்கள் பாதிக்கப்படுவர். இதனால் திசை மாற்றங்கள் ஏற்படும். இந்தியாவில் வடக்கு — தெற்கு அபிப்பிராய பேத நிலை ஏற்படும். விட்டுவிட்டு கட்சிமாறும் நிலைகள் ஏற்படும். மேற்கு உலகமானது கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்கு பொருளாதார அழுத்தம் கொடுக்கும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்தியங்களில் இயற்கையின் சீற்றம், அழிவுகளைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

எவ்வளவு உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக மாட்டாது. கொடிகட்டிப் பறந்த சிலர் கையேந்திப் பலரிடம் போய் நிற்கவேண்டிய நிலை. அவரவர் பலன் அவ்வளவுதான். தொழில் ஸ்தானத்தில் அலட்சியத் தன்மை, இடமாற்றம் புதிய காணி பூமிக்கதை வந்து போகும்: எதிர்ப்பாலாரால் கலங்குவீர்கள். இடாம்பிகச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள்,மேலதிகாரிகள் உதவுவார்கள். சளி உஷ்ணபீடைகள், பித்தக் கொதிப்பு, என்பன வரும். தூரதேசச் செய்திகள் வரும். மருந்துத் துறை, புடைவைத்துறை, புகைப்படத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.

### இடபம்

உண்மையான நம்பிக்கையை இறைவன் ஏற்றுக் கொள்வான. வன்செயலால் எப் பிரச்சினைகளும் தீர்க்க முடியாது. எனவே தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக நடந்து, வரும் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். குடும்பத்தினரின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். இடமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதிக நீர் குடியுங்கள். அல்லது சல எரிவு கொடுக்கலாம். அதிக ஆசையால் துன்பங்கள் வரும். போட்டிகளைத் தவிர்த்து நடவுங்கள். நெஞ்செரிவு, சூட்டு வருத்தம், வாய்வு அழுத்தம், சலவருத்தம் என்பன கொடுக்கும்.பத்திரிகைத்துறை, புடைவைத் துறை, செய்தித்துறை, கொம்பியூட்டர்துறை, போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.

### மிதுனம்

தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். பொருளுக்காக எதையும் செய்வீர்கள். அயலவர்களை நம்பாதீர்கள். குடும்பத்தினரின் பொருள் இழப்பு வரலாம். கறுப்புப் பொருள் இழப்பு வர இடம் உண்டு. வாக்குக் கலக்கம் ஏற்பட்டு மனம் வருந்த இடமுண்டு. தலைவலி, சலிப்பு, களைப்பு' நாரிப்பிடிப்பு என்பன வரும். நகைத்துறை, செய்தித்துறை, பிரயாணத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### கடகம்

ஒருவரிடம் உதவி கேட்பதாயின் அவருக்கு ஏதாவது கொடுத்துத் தான் பெறமுடிகின்றது. உதவிக்கு ஏதாவது உதவி செய்து தான் பல காரியங்கள் நடக்கின்றனஎன்பதை தொழில் ஸ்தானத்தில் உணர்வீர்கள். இரக்க மனத்துடன் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள். அயலவர்கள் உதவி செய்து தருவார்கள். குடும்பத்தினரின் நன்மைக்காக ஓடியாடித் திரிவீர்கள்— புதிய புடைவை, நகை வரலாம், வயிற்று வருத்தம், நெஞ்சுப் பிடிப்பு, கைகால் உளைவு, இரத்த அழுத்தம் என்பன வரலாம். சந்தைவியாபாரம், மருந்துத்துறை, குருத்துறை, இரும்பு, அரசியல் துறை போன்ற துறையினர்களுக்கு அதிக மாற்றங்களும் இலாபங்களும் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி

### சிங்கம்

உண்மைகள் என்றும் உறங்குவதில்லை. நல்லவர்கள் எப்பொழுதும் நியாயத்திற்காக போராடியபடிஇருப்பார்கள். தவறுகள் செய்யாதவர்கள் எதற்கும் பயந்து ஏன் ஒதுங்க வேண்டும்? நீதியை நிலைநாட்டுங்கள். நல்லவர்களைக் காப்பது உங்கள் கடமையாகும். தொழில் ஸ்தானத்தில் உறுதியான நடவடிக்கை எடுத்து பல வெற்றிகளை நிலைநாட்டு

## மகாதேவா ஜோதிடம்

வீர்கள். எதிரிகள் குறுகிய நோக்கம் கொண்டு மறைமுக அழுத்தங்களைத்தருவார்கள். வருங்காலத்தில் உங்களுக்கு உயர்பதவி காத்திருக்கின்றது. களைப்பு, வேலைப் பளுவால் உறக்கமின்மை, கண் கூச்சம், உஷ்ணபீடைகள் வரும்.குருத் துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### கன்னி

சில நேரங்களில் சில மனிதர்களின் உண்மை ரூபத்தை நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் கவனமாக இருங்கள். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ என்ற ஏக்க நிலை ஏற்படலாம். மாற்றங்கள் சகஜம். நீதிக்காகப் போராடுவீர்கள். சலன மனோநிலை ஏற்படலாமா? வீடு, வாகனங்களால் வசதிகள் ஏற்படும். இடுப்பு வருத்தம், மூலவருத்தம், இரத்த அழுத்தம், நெஞ்சுநோ, சளி என்பன கொடுக்கும். இசைத் துறை, வியாபாரத்துறை, அஞ்சல்துறை, குருத்துறை, அரசியல்துறை போன்ற துறைகள் தொடர்பானவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.

### துலாம்

நீதி, தர்மத்திற்காகப் போராடும் நீங்கள் உண்மையைக் கண்டுபிடித்து சரியான தீர்ப்பைக்கொடுக்கப்போராடுவீர்கள். உங்களால் தர்மம் நிலைநாட்டப்படும். தொழில் ஸ்தானத்தில் போராட்ட சூழ்நிலை வந்தாலும், நன்மைகள் நடக்கும். உறுதியான முடிவு எடுப்பீர்கள். துன்பம் தந்தவர்கள்,விலகிப்போவார்கள். எதிர்ப்பாலார்உதவிகள் செய்வார்கள். குடும்பப் பொறுப்பு,தொழில் ஸ்தானப் தில் புதிய பொறுப்புக்கள் தேடிவந்து கொண்டிருக்கும். தலைவலி, வயிற்றுக்குழப்பம், தோல்வருத்தம், சல உபாதை என்பன கொடுக்கும். கோயில்துறை, குருத் துறை, நிர்வாகத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி,

### விருச்சிகம்

மனிதர்களுக்கு ஏன் தாழ்வு நிலை வருகின்றது? ஒருவரை ஒருவர் மதியாத காரணத்தாலும் தாழ்வுநிலை வரலாம். உங்களை மதியாத சிலர் கீழ்நிலை அடைவதை தொழில் ஸ்தானத்தில் பார்ப்பீர்கள். திடீர்ச் செய்திகள் வரும். மன ஆறுதல் ஏற்படும். புத்திரர் அல்லது சகோரங்கள் சிறப்பு அடைவார்கள். இனசன வருகை, நண்பர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். கிருமித்தாக்கம், வயிற்று நோ, இரத்த அழுத்தம், நாரிநோ, உஷ்ண பீடைகள் என்பன வரும். குருத்தொழில், தொழில் நுட்பத்துறை, மருந்துத் துறை, வங்கித்துறை, வியாபாரம், தோட்டம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நற்பலன், மாற்றங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.

### தனுசு

போட்டிகள் வேண்டும் தான். அது வளர்ச்சிக்கு கைகொடுக்க வேண்டும். உங்களின் கண்டிப்பில் கூட உயர்ச்சி இருக்கும், மற்றவர்களுக்கு பல உதவிகளைச் செய்து புகழ் அடைவீர்கள், எதிர்ப்பாலாருக்கு குடும்பத்தில் சுகயீனங்கள் ஏற்படும். தூரதேசத்திற்குச் செய்தி அனுப்புவதும் பதில் வருவதுமாக இருக்கும். பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். எதிரிகள் கண்டு பதுங்குவர். இனஜன உதவிகள் கிடைக்கும். வயிற்று உபாதை, காய்ச்சல், நாரிஉளைவு, கை கால் பிடிப்பு வரும். சந்தை வியாபாரம், பாதுகாப்புத்துறை, இரும்பு, மரத் தொழில் செய்பவர்கள் இலாபம் அடைவர்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.

### மகரம்

முன்னுக்குச் செய்தது பின்னுக்கு வந்து வருத்தாமல் இருக்காது. சரியான அத்திவாரம் இல்லாது— பிறரின்— பலரின் — ஆலோசனைப்படி நடந்து திடீரெனச் சரிவு வருவது போன்ற நிலை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் ஏச்சும், பேச்சும் இருக்கும், அடிக்கடி பதற்ற நிலை வரும். பொருள்களில் கவனம். இடமாற்ற யோசனை வரும். ஆறில் வியாழன் வர இருப்பதனால் குடும்பத்தினரின் பொருள் செலவுகள், வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். நரம்புப்பிடிப்பு, மனக் குழப்பம், அடிக்கடி ஆத்திரப்படல், தலைவலி, மூட்டுவலி என்பன கொடுக்கும். கலைத் துறை, மருந்து, வாசனைப் பொருள்கள் விற்பனை, குருத் தொழில், ஹோட்டல், வங்கித்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக இலாபங்கள் கிடைக்கும்,

★ அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.

### கும்பம்

மனிதர்களின் அவதி, அகங்காரம் காலப்போக்கில் அன்பு அமைதியை இழக்கச் செய்துவிடும். எனவே தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். பொருள் வரவு சகோதரங்களின் ஆதரவு, புதிய புடைவை அல்லது நகைச் செலவுகள் இருக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். தாய் வழியினருக்கு நல்லதல்ல. அரச அதிகாரிகள், உதவிகள் செய்வார்கள். நண்பர்கள். உதவிகள் செய்து தருவார்கள் அவமானங்கள் ஏற்படலாம், கை கால் பிடிப்பு, நோ, குடல், வயிற்றுநோ, நரம்பு உளைவு, உஷ்ண, பீடைகள் என்பன கொடுக்கும். குருத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்து, இரும்புத்துறை, போன்ற துறையினர்களைச் சேர்ந்தவர்கள் ஆதாயம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள் :- வியாழன்.

### மீனம்

எப்பொழுதும் முயற்சி உடையவர்கள் என்றோ ஒரு நாள் அத்துறையில் உச்சிக்குப் போய்விடுவார்கள். எனவே உங்கள் துறைகளில் அதாவது தொழிலில் ஊக்கமாக இருக்கவும். தூரதேசச் செய்திகள்மனமகிழ்ச்சிகளைக் கொடுக்கும். சிலவேளை பிடிவாதத்தால் இழப்புக்களைச் சந்திப்பீர்கள். அயலவர்களுடன் நிதானமாக இருக்கவும். வீண்பழி சுமத்துவார்கள். சளித்தொல்லை, வயிற்றுநோ, சமிபாட்டுக் குறை, குடல்வருத்தம், நாரிப் பிடிப்பு, உஷ்ணபீடைகள் என்பன வரும். வீடு, வாகன யோகம் கொடுக்கும். பாதுகாப்புத்துறை,சந்தைத்துறை, தொழில் நுட்பத் துறை மருந்துத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள் :- வியாழன்.


## 2001 - அனுமதி

பரம்பரை வைத்தியர்களின் குடும்பத்திலிருந்து வந்தவர்களுக்கு விசேட அனுமதி வழங்கப்படவுள்ளது.
தகைமை - க. பொ. த (சா / த) சித்தி
ஏனையோருக்கு உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி
விவரங்களுக்கு:-

**லங்கா சித்த ஆயுர்வேத**
**மருத்துவக் கல்லூரி,**
**127, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.** (88570)


## கண்ணீர் அஞ்சலி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் அறங்காவலர் குழுவின் உபதலைவர்

### சிற்றம்பலம் தங்கத்துரை

அவர்கள் 28-05-2001 திங்கட்கிழமை காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இவரின் வழிகாட்டலில் எமது கோயில் எழில் தோற்றம் பெற்றது. அமரரின் ஆத்மா பரமாத்மாவுடன் இணைந்து கொள்ள மாயவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அறங்காவலர் சபையும்,
பணியாளர்களும்.

**ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயில்,**
**துன்னாலை வடக்கு, புலோலி.**

(88580)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் செல்லத்துரை

(கார் உரிமையாளர்)

சன்னதி வீதி, கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை 31 - 05 - 2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், மனோரதி (கனடா), விக்னேஸ்வரன் (கனடா), செல்வரதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசி (கனடா), காந்திமதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், சின்னமணியின் சகோதரனும், பவானியின் மாமனாரும், சபேசன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும், சந்திராதேவியின் சிறிய தகப்பனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொறளை மலர்ச் சாலையில் நாளை (03-06-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்,

தகவல்:

**திரு. திருமதி வேலாயுதபிள்ளை (F.A) (சம்பந்தி) குடும்பத்தினர்.**

சன்னதி வீதி.
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

(88579)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதி பெற விண்ணப்பித்தவர்களில் கடந்த மாதம் 30ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சாவகச்சேரி

| | |
|---|---|
| (194069ஏ) | (194069பி) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (183932ஏ) | (183932பி) | (183932சி) |
| (188145ஏ) | (188179ஏ) | (188179பி) |
| (188478ஏ) | (188478பி) | (188478சி) |
| (188478டி) | (188478ஈ) | (188479ஏ) |
| (188479பி) | (188571ஏ) | (188571பி) |
| (188571சி) | (189905ஏ) | (189905பி) |
| (189905சி) | (190065ஏ) | (190065பி) |
| (190287ஏ) | (190295ஏ) | (192509ஏ) |
| (192539ஏ) | (192647ஏ) | (192666ஏ) |
| (192666பி) | (192801ஏ) | (192801பி) |
| (192801சி) | (193839ஏ) | (193839பி) |
| (193840ஏ) | (193840பி) | (193840சி) |
| (193875ஏ) | (193895ஏ) | (193916ஏ) |
| (193916பி) | (193936ஏ) | (194015ஏ) |
| (194033ஏ) | (194033பி) | (194033சி) |
| (194080ஏ) | (194186ஏ) | (194186பி) |
| (194169ஏ) | (194169பி) | (194504ஏ) |
| (194504பி) | (194519ஏ) | (194519பி) |
| (194519சி) | (194519டி) | (194546ஏ) |
| (194568ஏ) | (194574ஏ) | (194574பி) |
| (194574சி) | (194596ஏ) | (194596பி) |
| (194603ஏ) | (194603பி) | (194603சி) |
| (194603டி) | (194606ஏ) | (194606பி) |
| (194606சி) | (194635ஏ) | (194642ஏ) |
| (194642பி) | (194642சி) | (194642டி) |
| (194694ஏ) | (194694பி) | (194694சி) |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (181320ஏ) | (181320பி) | (181326ஏ) |
| (183744ஏ) | (185582ஏ) | (185582பி) |
| (185582சி) | (185582டி) | (185582ஈ) |
| (189854ஏ) | (189879ஏ) | (190231ஏ) |
| (190241ஏ) | (190241பி) | (192491ஏ) |
| (192491பி) | (192534ஏ) | (192545ஏ) |
| (192545பி) | (192564ஏ) | (192619ஏ) |
| (192619பி) | (192839ஏ) | (192839பி) |
| (193810ஏ) | (193810பி) | (193847ஏ) |
| (193886ஏ) | (193892ஏ) | (193950ஏ) |
| (193970ஏ) | (194000ஏ) | (194052ஏ) |
| (194073ஏ) | (194073பி) | (194094ஏ) |
| (194094பி) | (194094சி) | (194094டி) |
| (194758ஏ) | (194759ஏ) | (194760ஏ) |

(க-10)


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்

**வைகாசிப் பெருவிழா – 2001**

*இடம்:* **சந்நிதியான் ஆச்சிரம மண்டபம்.**
*காலம்:* நாளை (03.06.2001) ஞாயிறு காலை 8.30 மணி.
*தலைவர்:* திரு.S.A.E. ஏகநாதன் - *மாவட்ட நீதிபதி, பருத்தித்துறை.*
*வரவேற்புரை:* திரு.சி.நாகலிங்கம் - *பேரவைத் தலைவர்.*
*அருளுரை:* நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
*ஆசியுரை:* பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் *(பிரதமகுரு, வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தானம்.)*
பண்டிதர் சிவஸ்ரீ கை.நமசிவாயக் குருக்கள் *(ஆசிரியர்)*
*விருது பெறுபவர்:* **அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பி**
*வழங்குபவர்:* **துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*வாழ்த்துரை வழங்குவோர்:*
திரு.செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், கரவெட்டி.)
திரு.சி.முருகேசம்பிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதேச செயலர்.)
திரு.நா.மகேந்திரம்
(உதவித் திட்டப் பணிப்பாளர், பருத்தித்துறை.)
திரு.ஆறு.திருமுருகன்
(ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
திரு.ஆ.சிவநாதன்
(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி)
திரு.சி.சக்திகீரிவன
(செயலாளர், இந்துசமயப் பேரவை)

வழமை போல ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேச அபிஷேகங்களுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். இறுதியாக மாணவர்களது கலைநிகழ்வு இடம்பெறும். அருட்கவி ஐயாவின் அடியவர்கள் யாவரும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/16954)
ச.ஆ.சை.க.ப.பேரவை
தொண்டமனாறு.



# நவ ஆண்டு நினைவலைகள்

மண்ணகம் 19 . 12 . 1942



விண்ணகம் 11 . 06 . 1992

**அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்**
(ஓவசியர், **P.W.D.**)

அன்புமொழி பேசியெம்மை அரவணைத்த தெய்வமே!
அவனியிலே நின்பிரிவால் ஆறுதலை யாமிழந்தோம்!
நல்வழியில் யாம்வாழ வேண்டுமென்ற அப்பாவே!
நானிலத்தே உங்களையாம் என்றென்றும் மறவோமே!

*'தங்கத்தாமரை'*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**
(88510)


## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன்2

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று ஏகாதசி தினத்தன்று மாலை 4 மணிக்கு 'ஆழ்வாரின் சொல் நயம்' எனும் பொருளில் எம்.பி.அருளானந்தம் உரையாற்றவுள்ளார். (ஜ-5)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஜூன்2

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து நடத்தும் திரைப்படக்காட்சித் தொடரில் கடந்த வருடம் 5 ஒஸ்கார் விருதுகள் பெற்ற றிட்லி ஸ்கோட் இயக்கிய 'கிளாடியேட்டர்' என்னும் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இப்படக்காட்சி இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஜ-5)

## நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் நான்காம் ஆண்டு பூர்த்தி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடை பெறவுள்ளது. (க-4)

## விவரங்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்2

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்த விளையாட்டுக் கழகங்கள் தவிர்ந்த ஏனைய கழகங்களின் தலைவர், செயலாளர்களின் பெயர் மற்றும் முகவரி விவரங்களை மேற்படி செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்பாக இந்தப் பதிவினை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-5)

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

வடமராட்சி,ஜூன்2

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு புலோலி கிராமக் கோட்டடிச் சந்திக்கு அருகில் உள்ள பத்திரிகையாளர் இ.கிருபாகரசூரியனின் இல்லத்தில் சங்கத் தலைவர்கள் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும். (ஜ-173)

## பண்ணிசைப் போட்டி எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்2

நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பண்ணிசைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பம் செய்த அனைவரையும் தவறாது பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு சங்கத்தின் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர். (ஓ-10)

## கல்லூரிக்கு காணி கொள்வனவு

பருத்தித்துறை, ஜூன்2

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் இட நெருக்கடியைப் போக்குமுகமாக கல்லூரிக்கு அருகிலுள்ள பன்னிரண்டு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் பழைய மாணவிகளின் கொழும்புக் கிளை பதின்மூன்று லட்சம் ரூபா செலவில் இக்காணியைக் கொள்வனவு செய்து கல்லூரிக்குக் கையளித்துள்ளது. (ஜ-118)

## சுதுமலையில் வங்கிக் கருமபீடம்

சுதுமலை அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு அந்த ஆலயச் சுற்றாடலில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் விசேட கருமபீடம் ஒன்று இயங்கவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள சப்பறத் திருவிழாவின் போதும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் தேர், தீர்த்த உற்சவ நாள்களிலும் இந்த விசேட கருமபீடம் இயங்கவுள்ளது.

வங்கி முகாமையாளர் சி.கிருஷ்ணானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள விசேட கருமபீடத்தின் ஆரம்ப நிகழ்வில் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், மாவட்ட முகாமையாளர் ஏ.அருமைநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-5-90)

# சீ-நோர் நிறுவனத்தின் பெயர் 'நோர்த் சீ' என மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்ப்பாணத்தில் இயங்கிய 'சீநோர்' நிறுவனம் 'நோர்த் சீ' நிறுவனம என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு கம்பனிப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்விவகார அமைச்சினால் இந்தப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைவராக க.சுந்தரலிங்கம் மேற்படி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரதிப் பொதுமுகாமையாளராக கடந்த முதலாம் திகதி முதல் எஸ்.குகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிறுவனத்தின் கீழுள்ள குருநகர் வலைத்தொழிற்சாலையை இயக்குவதற்கான ஏற்பாடுகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிறசாலைக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் மற்றும் உபகரணங்களும் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவுள்ளன. (ஜ-5)


**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

02-06-2001

HAPPY



BIRTHDAY

# செல்வி கே. பவித்ரா

கல்வியங்காட்டைச் சேர்ந்த
திரு.திருமதி கேதீஸ்வரசர்மா - வதனா
தம்பதிகளின் செல்வப் புதல்வி
**செல்வி பவித்ரா**

தனது முதலாவது பிறந்நாளை இன்று (02-06-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

பவித்ராவை அப்பா, அம்மா, பாட்டி, அம்மம்மா, தாத்தாமார், பூட்டிமார், பூட்டன்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் அருளாலும் கல்வியங்காடு வீரபத்திரர் அருளாலும் பல்கலையும் கற்று ஆரோக்கியத்தோடு தீர்க்காயுசுடனும் நீடூழி காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

வ.கேதீஸ்வரசர்மா
*வீரபத்திரர் வீதி, கல்வியங்காடு.* (88552) (அப்பா)



## தூய ஆவியார் பெருவிழா

**திருவிழிப்பு வழிபாடு 2-6-2001**

★ இன்று சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் புனித மாட்டினார் குருமட மைதானத்தில் 8.30 மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை 4.30 மணிக்கு திருப்பலியுடன் முடிவடையும்.
★ பண்டத்தரிப்பு பத்திமா மாதா ஆலயத்தில் இரவு 8மணி தொடக்கம் அதிகாலை 5 மணிவரையும் நடைபெறும்.
★ பருத்தித்துறை தோமையார் ஆலயத்தில் இரவு 8 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரையும் நடைபெறும்.

**ஆயர் இல்லம்**
*யாழ்ப்பாணம்.*
(88507)



# நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு

தாயின் மடியில் 04 - 08 - 1971



இறைவன் அடியில் 19 - 05 - 1997

**செல்வி அனுஷா பத்மநாதன்**

உள்ளத்தில் வஞ்சமின்றி
ஊரதனை உறவாய் எண்ணி
உயர்வுடன் வாழ்ந்தவரே
உம்மை என்றும் மறப்போமா?

பிரிவில் வாடும்:
**பெற்றோர், சகோதரர்கள், மைத்துனி, உறவினர்கள்.**

22/6, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(88553)

### கடந்த ஆண்டு புலிகள் படையெடுத்து முன்னேறியபோது

# யாழ்.குடாவில் சிக்குண்ட படையினரை மீட்க இந்தியா இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிட்டிருந்தது!

## பாதுகாப்பு அமைச்சின் ஆண்டறிக்கையில் பரபரப்பான தகவல்

புதுடில்லி,ஜூன்2

யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் கடந்த வருட முற்பகுதியில் கடுமையான தாக்குதலை மேற்கொண்ட வேளை, குடாநாட்டின் உள்ளே சிக்கியிருந்த இலங்கை இராணுவத்தினரை மீட்பதற்காக இந்தியக் கடற்படை 'ஜல்நிகாஷ்' எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவிருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2000-2001ஆம் ஆண்டிற்கான இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் ஆண்டறிக்கையிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை நோக்கி விடுதலைப் புலிகள் துரிதமாக முன்னேறத் தொடங்கியதையடுத்து மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்த இலங்கை இராணுவத்தை மீட்பதற்காக 'ஒப்பரேஷன் ஜல்நிகாஷ்' திட்டமிடப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிலிருந்து இலங்கை இராணுவத்தினரை வெளியேற்றும் நடவடிக்கைக்காகத் தயாராகுமாறு இந்திய கடற்படையின் கிழக்கு பிராந்திய படைப்பிரிவிற்கு உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிலைமைக்கேற்ப கிழக்கு பிராந்திய கடற்படையின் கப்பல்கள் தயார் செய்யப்பட்டன. வேறு பிரிவுகளிலிருந்தும் உதவிக்குக் கப்பல்களைப்பெறத் தீர்மானிக்கப்பட்டது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கப்பல்களின் சுடு திறனை அதிகரிப்பதற்காக உடனடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், யுத்தம் நடைபெறும் பகுதி ஒன்றில் மனிதாபிமான நோக்கங்களுக்காகக் கடற்படை பயன்படுத்தப்படும்போது கைக்கொள்ளவேண்டிய தந்திரோபாயங்கள் குறித்த தெளிவினை தந்ததாக இந்திய பாதுகாப்பு அமைச்சின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தியக் கடற்படை இலங்கை விடுத்த வேண்டுகோளையடுத்தா இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பது குறித்து ஏதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த வருடம் விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றிய பின்னர் யாழ்.குடாநாட்டை நோக்கி முன்னேறி கொழும்புத்துறை பகுதியில் நிலைகொண்ட வேளையில் இலங்கை அரசாங்கம் யாழ்.குடாநாட்டில் உள்ள தனது படைகளை காப்பாற்றுவதற்கு இந்திய உதவியை நாடியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தியா அவ்வேளை மனிதாபிமான உதவிகளை வழங்கவும், புலிகள் மேலும் முன்னேறும் பட்சத்தில் குடாநாட்டின் உள்ளே சிக்கிக்கொள்ளும் படையினரை மீட்பதற்கான உதவிகளை வழங்கவும் முன்வந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குரல்வளை சிகிச்சை வெற்றி

பொஸ்டன்,ஜூன்2

மூன்று வருடங்களுக்கு முன் சத்திரசிகிச்சை செய்யப்பட்டவரும் 20 வருடங்கள் பேசமுடியாத நிலையில் இருந்தவருமான 40 வயதான திமோதி ஹெய்ட்லர் தற்போது பாடுகிறார்; நன்றாகப் பேசுகின்றார் என வைத்திய அறிக்கை ஒன்று கூறியது.

மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் குரல்வளை நசுங்கியதால் பேச முடியாத நிலையிலிருந்த அவருக்கு ஒஹியோ, கிளீவ்லண்ட வைத்திய நிலையத்தில் குரல்வளை மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு மூன்று நாள்களுக்குப் பின் அவர் டாக்டர்களை நோக்கி 'ஹலோ' என அழைத்த போது டாக்டர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.(ஐ-7)

## ஜப்பானை பூகம்பம் தாக்கலாம்

டோக்கியோ,ஜூன்2

மத்திய ஜப்பானை பெரும் பூமி அதிர்ச்சி எவ்வேளையும் தாக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 5 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கும் ஆபத்து இருப்பதாகவும- ரிச்டர் அளவில் 8.0 புள்ளியாக இருக்கக் கூடிய அந்த நில அதிர்வு குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு -

பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

### வளைகுடா கடற்படைத் தள்த்தில்

# அமெரிக்கப் படைகள் அதி உஷார் நிலையில்!

வாஷிங்டன்,ஜூன்,2

அமெரிக்க எதிர்ப்பு கெரில்லாக்களின் தாக்குதல் அச்சத்தை எதிர்பார்த்து, பாஹ்ரெய்னிலுள்ள அமெரிக்கப் படைகள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

5ஆவது அமெரிக்கக் கடற்படையின் தலைமையகமான வளைகுடா எமிரேட்ஸில் தாக்குதல் அச்சுறுத்தல பற்றிய உளவுத் தகவலை அடுத்தே படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

ஏமன் துறைமுக நகரான ஏடனில் உள்ள அமெரிக்கர்களுக்கு எதிராக அபாயகரமான, பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளது என ஏ.பி.ஸி செய்தி கூறியது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் 12ஆம் திகதி ஏடனில் யு.எஸ்.எஸ்.கோல் என்ற அமெரிக்க நாசகாரி, சேதப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏமன் தலைநகரிலுள்ள அமெரிக்கர்கள் அங்கிருந்து புறப்படுமாறு கோரப்பட்டுள்ளனர் என்றும், அவர்களை ஏற்றிவர விமானம் ஒன்றை அனுப்புவதற்கு ஏமன் அரசாங்கத்திடம் வாஷிங்டன் அனுமதி கோரியுள்ளது என்றும் பி.பி.ஸி கூறியுள்ளது. ஏடனில் சில டசின் அமெரிக்கர்களே எஞ்சியிருப்பதாகவும் கூறப்பட்டது.

கென்யாவிலும், தன்சானியாவிலும் அமெரிக்கத் தூதரகங்களைத் தாக்கிய நால்வர் நீதிமன்றத்தினால குற்றவாளிகளாகக் காணப்பட்டதறகு முன்பே, பாஹ்ரெய்ன் அச்சுறுத்தல் இருந்ததாக சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.

உலகின் மிக நவீன யுத்தக் கப்பல்களில் ஒன்றான சோல் குண்டுத்தாக்குதல் காரணமாக மூழ்கும் நிலை ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

# வாஜ்பாய் – முஷாரப் சந்திப்பு ஜூலை முதல் வாரத்தில்





புதுடில்லி,ஜூன்2

காஷ்மீர் நிலைமை தொடர்பாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்தமாதம் முதல் வாரத்தில் நடைபெறும்.

மத்திய நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரமோத் மகாஜன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 7ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய்க்கு மும்பையில் மாற்று மூட்டுப் பொருத்துவதற்கான சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது. ஆகவே இந்தச் சிகிச்சையில் இருந்து பிரதமர் சுகமடைய மூன்று வாரங்கள் ஆகலாம்.எனவே பிரதமருக்கான சத்திரசிகிச்சை இடம் பெறுவதற்கு முன்னர் மூஷாரப்புடனான பேச்சுக்கள் நடைபெறலாம் என ஊகிக்கப்படுகிறது.காஷ்மீர் நிலைமை தொடர்பாக பேசசு நடத்தவருமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பர்வேஷ்முஷாரப்புக்கு அழைப்பு விடுத்ததும் - அதனை ஏற்ற முஷாரப் பேச்சுக்கு சம்மதம் தெரிவிக்கும் வகையிலான கடிதத்தை கடந்த செவ்வாயன்று இந்தியப் பிரதமருக்கு அனுப்பிவைத்ததும் - தெரிந்தவையே. (ஐ-7)

# காஷ்மீர் விவகாரத்துக்கு ரஷ்யாவின் மத்தியஸ்தம் கோருகிறார் முஷாரப்!

இஸ்லாமாபாத்,ஜூன்2

காஷ்மீர் நிலைமை குறித்து இந்திய அரசுடன் பேச்சுநடத்த சம்மதம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் அந்தப் பேச்சுக்களின் போது ரஷ்யா மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.

ரஷ்ய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே முஷாரப் இதனைத் தெரிவித்துள்ளார் -

காஷ்மீர் நிலைமை தொடர்பாக இதுவரை காலமும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தைக் கோரிவந்த பாகிஸ்தான், தற்போது ரஷ்யாவின் மத்தியஸ்தத்தைக் கோரியுள்ளது. பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதற்கு ரஷ்யா மறுத்துவிட்டது. ஆனால் நாம் அதிசிறந்த யுத்த விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளோம் என்றும் முஷாரப் அப்பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (ஐ-7)

# மதுபானம் வாங்க முயன்ற புஷ்ஷின் மகள் கைது!

ஒஸ்ரின்,ஜூன்2

போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்து மதுபானம் வாங்க முயற்சி செய்ததாக அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் மகள் ஜெனனா மீது குற்றசசாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெக்ஸாஸ் மாநில சட்டப்படி மது அருந்துவதற்கான வயது 21 ஆகும். ஆனால் 19 வயதான ஜென்னா போலி அடையாள அட்டையைக் கொடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை உணவு விடுதி ஒன்றில் மதுபானம் கொள்வனவு செய்ய முயன்ற போதே அகப்பட்டார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பும் இவ்வாறானதொரு முயற்சியின் போது கைதான இவருக்கு நீதிமன்றம் 5125 டொலர்களைத் தண்டமாக விதித்ததுடன் 8 மணித்தியாலம் கட்டாய சமூகசேவையில் ஈடுபடுமாறும் பணிததிருந்தது.

இதுபற்றி வெள்ளை மாளிகையில் இருந்து எதுவிதக்கருத்துக்களும் வெளியிடப்படவில்லை. ஜனாதிபதி புஷ்ஷும் அதிக மதுபோதையுடன் கார் செலுத்திய குற்றத்திற்காக முன்பு தண்டனை பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## உலக அரங்கில்

### ஒல்ட்ஹாமில் அமைதி

லண்டன்,ஜூன்2

இங்கிலாந்தின் வடமேற்கில் உள்ள ஒல்ட்ஹாம் நகரில் 3 தினங்கள் இடம்பெற்ற வன்முறைகளுக்குப் பின்னர் தற்போது அங்கு அமைதி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது.

அங்கு ஆசிய நாட்டவர்களுக்கும், வெள்ளை இன வெறியர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது தெரிந்ததே. (ஐ)

# 'அக்கினி' ஏவுகணை உற்பத்திக்கு இந்திய அரசு அனுமதி அளித்தது

புதுடில்லி,ஜூன்2

நீண்டதூரம் சென்று தாக்கக் கூடிய 'அக்கினி' ஏவுகணை உற்பத்திக்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் இதனைத் தெரிவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் இந்த 'அக்கினி' ஏவுகணைகள் இந்த வருட இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்றும் -

மிகக் குறைந்த அளவில் இந்த ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் -

அவர் தெரிவித்துள்ளார். (ஐ-7)



கன்சர் வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர், இரும்புச் சீமாட்டி மார்க்கிரட் தட்சரின் முகவடிவில் வரையப்பட்ட தற்போதைய கன்சர் வேட்டிவ் கட்சித் தலைவர் வில்லியம் ஹேக்கின் முகத்தையே படத்தில் காண்கிறீர்கள். லண்டனில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கிறது. (ஐ)

# ஆப்கானிஸ்தான் பெண்கள் இனி இறுக்கமான உடை அணியத் தடை!

பெண்கள் தங்கள் உடலைத் தழுவும்படி இறுக்கமான ஆடைகளை அணியக் கூடாது என்று ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளர்களான தலிபான்கள் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்கள் தங்கள் நாட்டுப் பெண்கள் படிக்கக்கூடாது, வேலைக்குச் செல்லக்கூடாது, உச்சந்தலை முதல் பாதம்வரை மூடிய ஆடைகளை அணிய வேண்டும். வெளிநாட்டினர் அடையாள சின்னத்தை அணிந்துதான் வெளியே நடமாடவேண்டும் என்பன போன்ற கெடுபிடிகளை விதித்துள்ளனர். தலிபான்களின் உத்தரவை ஏற்று அந்நாட்டுப் பெண்கள் பர்தா அணிந்துதான் வெளியே செல்கின்றனர். ஆனால், "அந்தப் பர்தா உடலைத் தழுவியபடி இருக்கிறது. எனவே, இறுக்கிப் பிடிக்காத தளர்வான பர்தாவைப் பெண்கள் அணிய வேண்டும்" என்ற புதிய உத்தரவைத் தலிபான்கள் பிறப்பித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் வாழும் இந்துக்கள் மஞ்சள் உடை அணிந்து வெளியே செல்லவேண்டும் என்ற தலிபான்களின் உத்தரவுக்கு ஈரான் நாட்டு வெளியுறவுத்துறை கண்டனம் தெரிவித்துள்ளது. தலிபான்களின் இந்தக் கெடுபிடி இஸ்லாம் மீதுள்ள மதிப்பைக் குறைத்துவிடும் என ஈரான் குறை கூறியுள்ளது. (ஐ)



பாடசாலை மாணவர்களிடையே வீதி ஒழுங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ்.மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டியின் ஏற்பாட்டில் மாணவருக்கு விளக்க உரைகள் நேற்று முன்தினம் நடத்தப்பட்டன. போக்குவரத்து பொலீஸ் பிரிவு அதிகாரிகள் மாணவருக்கு விளக்க உரையாற்றுவதையும் - அங்கு கூடியிருந்த மாணவிகளில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ) *(படம்: றோய் மதிவதனன்)*



திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் காணியில் புதிதாக நிறுவப்பட்ட வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களத்தின் வளிமண்டல அவதானிப்பு நிலையம் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிலையத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் , 51 ஆவது டிவிஷனின் துணைக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் விஜய விக்கிரம மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். *(படம்: றோய் மதிவதனன்)*

# கூட்டுறவுத் துறைக்கு ஏற்பட்ட இழப்பு விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,ஜூன்2

யாழ்.மாவட்டத்தில் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் வன்செயல்கள் காரணமாக கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளின் விவரங்களை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு கோரியுள்ளது.

கடந்த 18 வருடங்களில் காலத்திற்குக் காலம் கூட்டுறவு அமைப்புக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விவரங்களை யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக சமர்ப்பிக்குமாறு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டுறவு சங்கங்களின் தலைவர்,பொதுமுகாமையாளர் ஆகியோருக்கான கலந்துரையாடலில் அமைசசர் சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய புனரமைப்பு முதற்கட்ட நிதியுதவி

## நேற்று 15 லட்சம் ரூபா கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயப் புனரமைப்புக்கு முதற்கட்டமாக 15 லட்ச ரூபா நிதி ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராசா ஆலய பொருளாளரிடம் நேற்று வழங்கியதாக அந்தக் கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட தலைமைச் செயலகத்தில் நேற்று கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய நிர்வாகிகள் மற்றும் கொக்குவிலில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுமார் 150 பேர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இச்சந்திப்பில் வைத்து, ஆலயப் புனரமைப்புக்குரிய காசோலையை நாடாளுமன்ற உறுப்பினர் சி.தவராசா ஆலயப் பொருளாளரிடம் வழங்கியுள்ளார்.

இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபையின் தலைவருமான க.மணிபல்லவராஜனும் (நிசாந்தன்) கலந்து கொண்டார். என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## அறிமுறைப் பரீட்சை. ஒத்திவைப்பு

வட இலங்கைச் சங்கீத சபையினால் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த அறிமுறைப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வடஇலங்கைச் சங்கீதசபையின் தலைவரும், யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளருமான திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

## இளவாலையில் ச.ச. நிலைய திறப்பு விழா

இளவாலை,ஜூன்2

இளவாலை புனித அன்னாள் சனசமூக நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெ.அ. ஜோன்சன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இந்நிகழ்வில் பங்குத்தந்தை அன்ரனி பாலாவினால் புனித அன்னாள் திருவுருவப் படம் ஸ்தாபிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படும். (ஒ-48)

## யாழ்.செயலக வளாகத்தில் மிதிவெடி!

யாழ்.செயலகத்திலுள்ள பழைய கேட்போர் கூட கட்டடத்துக்கு அருகில் மிதிவெடி ஒன்று வெடிக்காத நிலையில் காணப்படுகிறது.

கடந்த வாரம் இந்த மிதிவெடி கண்டுபிடிக்கப்பட்ட போதும் இதனைச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்த மிதிவெடி தொடர்பாக யாழ். செயலகத்தினால் படைத்தரப்புக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## 'சைவ நீதி' போட்டி; பரிசுகள் வழங்க மாற்று ஏற்பாடு


"சைவநீதி" சஞ்சிகை நிலையத்தினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற குடாநாட்டுப் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருக்கும் விழா ஒன்றில் வைத்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெறுகின்றது. எனினும் குடாநாட்டுப் போட்டியாளர்கள் இநத வைபவத்தில் கலந்து கொள்ள முடியாததையிட்டே மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக "சைவநீதி" சஞ்சிகை வெளியீட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் 078 -625882, 01-599221 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொளளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ-7)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 - 07 - 1934



இறப்பு 25 - 05 - 1991

**அமரர் இராஜசிங்கம் இராஜமனோகரன்**

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

திதி: 02-06-2001

உங்கள் ஆத்மா சாந்தியடைய

காசி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்.

*'இராஜகிரி'*
*தெல்லிப்பழை.* (C/16962)

## மயிலங்கூடல் அருள்மிகு ஞான வைரவர் ஆலய

## வருடாந்த விசாகப் பொங்கல் விழா

*அன்புடையீர்!*

எமது ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் (04.06.2001) திங்கட்கிழமை காலை 7.00 மணி அளவில் நடைபெறும்.

மேலும் ஆலய பாலஸ்தாபன வைபவம் எதிர்வரும் (10.06.2001) ஞாயிறு மாலை 3 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி எதிர்வரும் (11.06.2001) திங்கட்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் 7.25 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும்.அத்தருணம் அடியவர்கள் யாவரும் தவறாது கலந்து வைரவப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*ஆலய பிரதம குரு:* இராம. பாலச்சந்திரக்குருக்கள்

இறை திருத்தொண்டில்

(88576) *மேற்படி ஆலய பரிபாலன சபையினர்.*

## யாழ்.பல்கலைக்கழகம் புவியியற் கழகம் - 2000/2001 அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| முதலாவது பரிசு 05703 | : | துவிச்சக்கர வண்டி அன்பளிப்பு எஸ். பேரம்பலம் வர்த்தக ஸ்தாபனம், கல்யாணி கிறீம் ஹவுஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | திரு.பி.உதயராஜா இல.11, சிவகுருநாதன் லேன். கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| இரண்டாவது பரிசு 05603 | : | ரேப் றேடியோ | திரு.வி.ரவீந்திரன் கல்வி வலயம், தென்மராட்சி. |
| மூன்றாவது பரிசு 00303 | : | சுவர் மணிக்கூடு | இந்திரபிரியதர்ஷினி 48/1 பழம் வீதி, கந்தர்மடம். |

ஆறுதல் பரிசுகள்:

1) 2108, 2) 11361, 3) 00751, 4) 10351, 5) 03225, 6) 00401, 7) 01902, 8) 04571, 9) 04457, 10) 12902.

அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் பற்றுச்சீட்டுக்களை ஒப்படைத்து உரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும். (88582) *- புவியியற் கழகம்.*

## 29.04.2001 இல் அகவை அறுபது பிறந்தது



யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
அவர்கள் அறிவுண்டு மிக்க ஆற்றலுண்டு -
ஆறாத் தாகமுண்டு அபிவிருத்தி ஆளுமையில்

- துணைவேந்தர்

**சுந்தரம் சேர் பாலசுந்தரம்பிள்ளைக்கு**

பிறந்தது அகவை அறுபது

குறிப்பு:- 05-06-2001 செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் பகல் 11.30 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜை ஆராதனையும் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

வாழ்த்துபவர்:-
ச.க.தனேந்திரன்.

(C/16961)

## ஸ்ரீ வல்லிபுர போட்டோ

SVF

★ மேலும் ஒரு தொகுதி புகைப்படச்சுருள்கள் பிரதியாக்கம் செய்து வந்து விட்டன.

★ இன்று 02-06-2001 மாலை புகைப்படச்சுருள்களும் வீடியோ கசற்றும் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

*புலோலி.* ☎070 212720 (88581) *நல்லூர்.* ☎021-2604

இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில்

# தென்னிலங்கை சர்வமதக் குழு 11ஆம் திகதி யாழ். வருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்2

தென்னிலங்கையில் இருந்து நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு 20 பேர் அடங்கிய சர்வமதக் குழுவொன்று இம்மாதம் பதினோராம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இனவிவகார தேசிய நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் வரும் இந்தக் குழுவினர் சில நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பலரையும் சந்திக்கவுள்ளனர்.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தின் பல இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

20 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெறும் கூட்டம் ஒன்றிலும் சர்வமதக் குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் குழுவினரின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் நடவடிக்கைகளில் யாழ்.செயலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாள்களில் அரச திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரசசார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

(க-5)

## 62 இலங்கையர் இத்தாலியில் கைது!

கொழும்பு,ஜூன்2

இத்தாலியின் தென் பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறிய 62 இலங்கையர்களை இத்தாலியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஆள்கடத்தல்காரர்களால் இத்தாலிக்குக் கூட்டிவரப்பட்ட இவர்கள் இத்தாலியில் சட்டவிரோதமாகக் குடியேறியிருந்தனர்.

மிக விரைவில் இவர்கள் நாடு கத்தப்படவுள்ளதாக இத்தாலிய அரசு அறிவித்துள்ளது.

(க-4)




உ

**யாழ்.கந்தர்மட**

**ஸ்ரீ சிவ உதயநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்**

**அனுவர்த்தன பிரதிஷ்டா**

**மஹா கும்பாபிஷேக விழா - 2001**

அம்பிகை அடியார்களே!

இன்று (02-06-2001) சனிக்கிழமை காலை மேணி முதல் மாலை 6.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் இடம் பெறும்.

நாளை (03-06-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.29 மணிமுதல் 12.53 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்

அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து உய்தி பெறுவீர்களாக.

ஓம் சக்தி!

- ஆலய தர்மகர்த்தா
செ.சூரியனும் அடியார்களும்.

(88577)



**ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா கோயில்**

**முக்கிய அறிவித்தல்**

ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா கோயில் பக்தர்கள் நாளை (03-06-2001) ஞாயிற்றுக்கிழமை ஆலயம் செல்லவிருக்கின்றார்கள். விரும்புபவர்கள் 03.06.2001 காலை 7.00 மணிக்கு (பு.நே.) அச்சுவேலி புனித சூசையப்பர் கோயிலில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- பக்தர்கள்.

(88587)



**கண்ணீர் அஞ்சலி**

**செல்வநாயகம் சற்குணாநந்தன்**

(வீனஸ் டில்கா உரிமையாளர்)

எமது நண்பரும் வீனஸ் டில்கா உரிமையாளருமாகிய செல்வநாயகம சற்குணாநந்தன அவர்களின் திடீர் மறைவினால் துயரம் அடைந்திருககும் அன்னாரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிபபதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சதா அன் சுதா
ஊழியர்கள்.

*284, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(88583)



**மரண அறிவித்தல்**

**முத்துத்தம்பி காந்தரூபன்**

(சிறைச்சாலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்)

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், இமையாணன் வடக்கை வாழ்விடமாகவும் கொண்ட மு.காந்தரூபன் நேற்று (01-06-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணரும் சர்மிளாவின்(நெ.ம.ம.வி. உயர்தர கலைப்பிரிவு மாணவி) பாசமிகு தந்தையும், தம்பியையா முதுத்தம்பியின் புதல்வனும், ஜெயரூபன்(பிரான்ஸ்), திருமதி விநாயகமூர்த்தி ஜெயந்தி, மு.வசந்தரூபன், திருமதி சிவாநந்தசோதி மாலதி (பிரான்ஸ்), திருமதி சிவபாலன் சுனேத்திரா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.சிவலோகம், திருமதி அழகம்மா சிவலோகம் அவர்களின் மருமகனும், சி.இராமகிருஷ்ணா (பொறுப்பாசிரியா, கணித மூலவள நிலையம், வடமராட்சி), திருமதி இரங்கநாயகி செல்வராசா (ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), திருமதி உமாதேவி கந்தசாமி (கனடா), ச.விநாயகமூர்த்தி (ஆசிரியர், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் செல்வராசா(புலோலி ப.நோ. கூ.சங்கம்), பொ.கந்தசாமி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (2.6.2001) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, எல்லங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

*இமையாணன் வடக்கு,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
சி.இராமகிருஷ்ணா
(கணித மூலவள நிலையம்)
திருமதி கா.மனோன்மணி
சி.சிவலோகம்

(C/16963)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்பபாணம் அத்தியடிப்பிள்ளையார் கோயிலில் வைகாசி விசாக உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்குப் பூரணை உற்சவமும் இடம்பெறும். (க-9)

★ ★ ★

சுழிபுரம்,ஜூன்2

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று சங்காபிஷேக வைப வத்துடன் முடிவடையும்.

தினமும் அம்பாள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். விசேடமாகக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். (க-28)

★ ★ ★

கோண்டாவில்,ஜூன்2

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நடைபெறும்.

மறுநாள் காலை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

(க-86)


**ராஜா**
யாழ்ப்பாணம்

விஜயகாந்த், குஷ்பு
மற்றும் பலர் நடிப்பில்

**சிம்மாசனம்**

தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)

(C/16941)



**நாகம்ஸ்**
சுன்னாகம்

சத்தியராஜ், குஷ்பு,
கபாலி நடித்த

**உன்னைக் கண் தேடுதே**

(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)

(88578)



**லஷ்சுமி**
இணுவில்

இரண்டாவது வாரம்
அஜித் ,லைலா
மற்றும் பலர் நடிப்பில்

**தீனா**

(ரீல்ஸ்)
அடுத்த வெளியீடு பாட்டாளி
காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (பு.நே.)
சனி, ஞாயிறுகளில்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்)

(C/16989)


## தெய்வீக ஸ்தலங்களில்



அராலி மத்தி உலோல சித்தி விநாயகருக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரில் விநாயகப் பெருமான் அண்மையில் பக்தர்கள் புடைசூழ வீதிவலம் வந்த காட்சி.

*(படம்:- வலி.மேற்குச் செய்தியாளர்)*




வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய சைவ சமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்புவிழா மகா சிவராத்திரியன்று நடை பெற்றது. முதலாம் தர மாணவர்களுக்கான நீதி நூல் மனனப் போட்டியில் சிறப்புப் பரிசில் பெற்ற ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய மாணவி செல்வி சண்முகவடிவேலு கீர்த்தனாவுக்கு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் அ.ஸ்ரீகுமரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*



பருத்தித்துறை தும்பளை தம்புருவளை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகராலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகாசங்காபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. சிவாச்சார்ய ஞானபானு சிவஸ்ரீ வ.வே.தியானருத்ராசாக் குருக்கள் தும்பாபிஷேகத்தை நடத்துவதைப் படதில் காணலாம்.

(ஐ-173)

# யாழ்.றோட்டறிக் கழக வைரவிழா; ஆளுநர் சகிதம் நிர்வாகிகள் வருகின்றனர்

## திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜுன்2

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் வைரவிழா நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக றோட்டறி மாவட்ட ஆளுநர் கிறிஸ் இராஜேந்திரன் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அவருடன் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட நிர்வாகிகள் பலரும் யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நாவலர் மண்டப வளாகத்தில் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் - சுமார் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட - சிறுவர் பூங்காவை மாவட்ட ஆளுநர் நாளை மறுதினம் மாலை 4 மணிக்குத் திறந்து வைப்பார்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக்கல்லூரியின் குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறும் யாழ்.றோட்டறிக் கழகத்தின் வைர விழாவில் றோட்டறி ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் தலைவர் அ.பஞ்சலிங்கம் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

வைரவிழா மலரை ஆளுநர் வெளியிட்டு வைப்பார்.

வசதியற்ற குழந்தைகளுக்கு கணனிக் கல்வியை வழங்குவதற்காக ஒரு தொகுதி கணனிகளையும் - றோட்டறிக் கழகங்களுக்கு இடையிலான இணைமானியத் திட்டத்தின் கீழ் யாழ்.றோட்டறிக் கழகத்துக்கு இந்நிகழ்ச்சியில் வைத்து றோட்டறி ஆளுநர் அன்பளிப்புச் செய்வார்.

தென்மராட்சி மாசாரில் இடம்பெற்ற சம்பவத்தில் தாய், தந்தையரை இழந்த மூன்று குழந்தைகளின் நலனுக்காக யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் சேகரிக்கப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா நிதியும் இந்நிகழ்வில் வைத்து குழந்தைகளின் பராமரிப்பாளரிடம் கையளிக்கப்படும்.

இக்குழந்தைகளின் கல்விக்காக ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களின் ஆதரவோடு முன்னெடுக்கப்பட்டிருக்கும் புலமைப்பரிசில் நிதியத்தின் முதல் கொடுப்பனவும் அங்கு வைத்து வழங்கப்படும்.

'சுடர் ஒளி' பத்திரிகையின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்துடன் இணைந்து யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நடத்திய மாணவ ஆயவாளர் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் அங்கு இடம்பெறும்.

யாழ்.றோட்டறிக் கழகத்தில் புதிதாக ஐந்து உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் வைபவமும் வைரவிழா நிகழ்வில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்ச்சி இடம்பெறும்.

வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் உடற்கல்வி, கடற்றொழில் கல்வி, தொழிலாளர் கல்வி ஆகியவை போன்ற பல துறைகளில் உயர் கல்விக்கு வசதி பெற்றுக் கொடுத்த சேவைக்காக பேராசிரியர் பொன்பாலசுந்தரம்பிள்ளையை யாழ்.றோட்டறிக் கழகம் கௌரவிக்க உள்ளது.

செவவாய் பிற்பகல் 2.30மணிக்கு யாழ்ப்பாண இளைஞர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடாபான அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான 'மாதிரி நேர்காணல்' பயிற்சி ஒன்றை ஆளுநர் கிறிஸ் இராஜேந்திரன யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவர்.

அதன் பின்னர் மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கூட்டம் ஒன்றில் "நேர்முகப் பரீட்சையில் செய்ய வேண்டியதும் செய்யக் கூடாததும்" என்ற தலைப்பில் ஆளுநர் கிறிஸ் இராஜேந்திரன் உரையாற்றுவார்.

அடுத்த நாள் காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி இன்றறக்ட் கழக நிகழ்வில் ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அன்று மாலை அவரும், அவரது குழுவினரும் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்வார்கள். (உ)

## வர்த்தகர்களின் முயற்சி தோல்வி!

# வடக்குக்கு இடமாற்றம் பெற்ற வங்கி அதிகாரி பதவியேற்பு!

மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளராக வங்கியின் கொழும்புத் தலைமைச் செயலகத்தினால் நியமிக்கப்பட்டிருந்த எஸ்.இளம்பிறைநாதன் வவுனியாவில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

தற்பொழுது வவுனியாவில் தங்கியுள்ள எஸ்.இளம்பிறைநாதனும் க.திருநாவுக்கரசுவும் யாழ்ப்பாணம் வருவதற்காகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கியின் வடவலய அலுவலகப் பொறுப்புகள் புதிய முகாமையாளரிடம் முன்னாள் முகாமையாளர் க. திருநாவுக்கரசுவினால் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்படவுள்ளன.

இதேவேளை -

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் வங்கியின் வட வலய அலுவலகத்தில் கடமையாற்றும் உதவிப் பிரதேச முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகத்திடம் இருந்த பொறுப்புக்கள் அனைத்தும் நேற்று முதல் பறிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள மக்கள் வங்கியின் தலைமைச் செயலகத்திலிருந்து நேற்று அனுப்பி வைக்கப்பட்ட 'பக்ஸ்' மூலம் இவரது பொறுப்புக்கள் அனைத்தும் நீக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனிடையில் -

வடவலய உதவிப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய க.திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி யாழ்ப்பாண வர்த்தகர்கள் எடுத்த முயற்சி - போராட்டம் எதுவும் பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (க-5)

## இத்தாலி செல்ல முயன்ற 17 பேர் நீர்கொழும்பில் கைதாகினர்

நீர்கொழும்பு,ஜுன்2

படகு ஒன்றின் மூலம் இத்தாலிக்குச் செல்ல முயன்ற 17 பேர் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நீர்கொழும்பு கடற்கரைப் பகுதியில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை ஏற்றிவந்த சொகுசு பஸ் ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். (க-4)

**CHEMISTRY CENTRE**

83, பலாலி வீதி, கந்தர்மடம்.

A/L 2002

மின்னொளியில் மீட்டல் வினாவிடை

CHE. - திரு.அன்பு

ஆரம்பம்:- 4-6-2001

C.Maths:- திரு.செந்தில்நாதன்.

(88551)

**SUBRA (14)**

சித்தன்கேணி

புலமைப் பரிசில் தரம் - 5

புதிய பிரிவு ஆரம்பம்: 05.06.2001 மாலை 4.30

ஆசிரியர்:- க.கைலநாதன்

★ அநேக பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க தரம் 3 ஆரம்பம். (C/16903)

உ

**திருமாங்கல்யதாரண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் நாளை (03-06-2001)ஞாயிற்றுக்கிழமை காலை 9.34 மணி முதல் முற்பகல் 11.20 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**சற்குணராஜன் (ராஜன்)**
(ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.)
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**நஜினி**
அவர்களுக்கும்

நல்லூரிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இடம்பெயர்வு காரணமாக எல்லோருக்கும் தனிப்பட்ட அழைப்புகள் கொடுக்க முடியவில்லை. ஆகவே இந்த அழைப்பையே தனியான அழைப்பாக ஏற்று வருகை தரும்வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**திரு. சி.ஐசே சின்னத்துரை**
சங்கத்தானை, சாவகச்சேரி.
**திரு.திருமதி சி.லெட்சுமணராஜா** (மகன்)
கொக்குவில் மேற்கு,
பூநாறி லேன், கொக்குவில்.

**திரு.திருமதி க.சந்திரமோகன்**
54, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

★ மணமகன் இல்லத்தில் மாலை 4 மணியளவில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

(இரு வீட்டார் அழைப்பு) (88471)

# பொ.ஐ.மு. - ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் மூத்த தலைவர்களும் -

பொ.ஐ.மு. அரசைக் கவிழ்த்து ஐ.தே.கட்சி அரசு ஆட்சிப் பீடமேறினால் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ், இ.தொ.கா. போன்ற சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் ஜே.வி.பியின் தயவில்தான் அந்த ஆட்சி நீடிக்க முடியும் என்பதை ஐ.தே.கட்சித் தலைவர்களும் -

நன்கு உணர்ந்திருப்பதாகக் கூறப படுகிறது.

இந்நிலையில் -

இரு தரப்பும் - சிறுபான்மையினரின் ஆதரவில் - தங்கி, நிலையற்ற - தள்ளாடும் - ஆட்சியை அமைப்பதிலும் பார்க்க, ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் பெரும்பான்மை இனக் கட்சிகளின் அணிகள் இரண்டும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பது சிறந்தது என அக்கட்சிகளின் பிரமுகர்கள் கருதுகின்றனர்.

இனப்பிரச்சினையால் தற்போது நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி, பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றை எதிர்கொண்டு முறியடிப்பதற்கு நிலையான - பலமான - அரசு தேவை எனச் சுட்டிக்காட்டப் படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சார்ந்த சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருக்க, மறுபுறத்தில் ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டிலான அரசு நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கைப்பற்றுமானால் அது நாட்டில் குழப்பத்தையும், சிறுபான்மைத் தமிழரின் போராட்டத்தில் உத்வேகத்தையும் அளிக்கும் என்று சிங்களத் தலைவர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்தகைய நிலையைத் தவிர்க்கும் நோக்குடன் முன்வைக்கப்படும் தேசிய அரசு பற்றிய யோசனைக்கு, பௌத்த தீவிரவாதிகள் மற்றும் மதவாதிகளின் ஆதரவும் முழுதாகக் கிட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து மேலும் ஆறு வருடங்களுக்கு எதிர்க்கட்சியில் இருப்பதிலும் பார்க்க -

அல்லது -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியில் வேறு ஒரு கட்சியைச் சேர்ந்தவர் அமர்ந்திருக்க, நிலையற்ற - பலமற்ற - சிறுபான்மை அரசு ஒன்றை அமைத்து அதில் இடம்பெற்றிருப்பதிலும் பார்க்க -

சில முன்நிபந்தனைகள் மற்றும் இணக்கத்தின் அடிப்படையில் தேசிய அரசு ஒன்றை அமைத்து அதில் இடம்பெறுவது உசிதமானது என ஐ.தே.கட்சியின் முக்கிய வட்டாரங்கள் சில கருதுவதாகவும் தெரிகின்றது.

இந்தப் பின்னணியில்தான் தேசிய அரசு அமைப்பதற்கான முயற்சிகள் மும்மரமாக நடப்பதாகத் தெரிவிககப் படுகிறது. (உ )

# குடிசன மதிப்பீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாடு எதிரியின் வசமானதில் இருந்து எத்தனையோ துன்ப, துயரங்களை சுமந்து வரும் மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதில் எதிரியும் எதிரியின் அடிவருடிகளும் மாறிமாறி முயன்று வருகின்றனர்.

சென்ற ஆண்டு யாழ்.குடாநாட்டில் வெடித்த போரின்போது பளைப் பகுதியிலும் ஏனைய பல பிரதேசங்களிலும் இராணுவம் மக்களையே கவசமாக்கிப் போரிட முனைந்தது.

ஆனாலும் எமது துல்லியமான திட்டமிடல் காரணமாகவும் அவ்வப்போது எமது அறிவிப்புக்கு இணங்க மக்கள் இடம்பெயர்ந்து எமக்கு ஒத்துழைப்புத் தந்ததாலும் இழப்புக்கள் பெருமளவில் குறைக்கப்பட்டன.

ஆனால் தற்போது இன்றும் ஒரு போர்ப்பிரதேசமாகக் காட்சியளிக்கும் தென்மராட்சிக்கு மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையில் அனைத்துத் தரப்பினரும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மீண்டும் ஒரு முறை போர் அனர்தத்தினாலும் அழிவுகளினாலும் மக்கள் அவலப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடனேயே, எமது உத்தியோக பூர்வ அறிவிப்புக் கிடைக்கும்வரை மீளக் குடியேறவேண்டாம் என்பதை அடிக்கடி தெரிவித்து வருகிறோம்.

எனவே தயவுசெய்து எமது அறிவிப்புக் கிடைக்கும்வரை மீளக்குடியேற வேண்டாம்.

அத்துடன் யாழ்.குடாவில் குடிசன மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. போர்ச்சூழல் மிகுந்த இக்கட்டான இந்தக்கால கட்டத்தில் எத்தனையோ மக்கள் இடம்பெயர்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தங்களது சுயதேவைக்காக அரசானது செய்யவிருக்கும் குடிசன மதிப்பீட்டினால் மேலும் எமது மக்கள் எத்தனையோ விதமான உரிமைகளை இழக்க நேரிடுவதுடன் ஆபத்தான நிலைக்கும் தள்ளப்படப் போகின்றனர்.

இதனால் எந்த நெருக்கடியிலும் நாம் அதனை அனுமதிக்கப்போவதில்லை. அதனால் எமது மக்களும் அரச அதிகாரிகளும் எமது நிலைப்பாட்டை விளங்கி விழிப்புடன் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் - என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வேண்டாம், யுத்தம் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கோரி, சிஹல உறுமய பத்து லட்சம் கையெழுத்துக்களைச் சேகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-4)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகத் தகவல்கள் வெளியாகிய நிலையில், தற்போது வடக்கிலும் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற புதிய தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தகவல்களால், விடுதலைப் புலிகள் எங்கு, எப்போது, எப்படி அடுத்த தாக்குதலை நடத்தப் போகிறார்கள் என்பது குறித்து படைத் தரப்பு குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது.(உ-ஒ-3)

## புலிகளைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனால்தான் பேச்சுத் தொடர்பான விடயத்தில் மிகுந்த விட்டுக்கொடுப்பு நிலையை - நெகிழ்வுப் போக்கை - அரசு கடைப்பிடித்து வருகிறது. புலிகள் அண்மையில் முன்வைத்துள்ள நிபந்தனைகள் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. - என்றார். (உ-4)

**மரண அறிவித்தல்**

**குமாரசாமி தங்கம்மா**

நீர்வேலி வடக்கு, காமாட்சி அம்பாள் கோயிலடியைச் சேர்ந்த குமாரசாமி தங்கம்மா நேற்று (01-06-2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை குமாரசாமியின் அன்பு மனைவியும், கனகசுந்தரம், கமலாம்பிகை, மகேஸ்வரி(இந்தியா), குணவதி (குணா - இந்தியா), மதிவதனா, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காசிநாதர்(முன்னாள் முகாமையாளர், கடதாசிக் கூட்டுத்தாபனம் - வாழைச்சேனை), புவனேஸ்வரி, கிருஷ்ணதாஸன்(இந்தியா), சிவராசா(ஜேர்மனி), மோகன்(சில்லாலை), சுபேந்திரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02-06-2001) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மாசுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

காமாட்சி அம்மன் கோயிலடி,
நீர்வேலி வடக்கு. (C/16965)

தகவல்:
கு.ரவிச்சந்திரன்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.